Adapted to the N…

# GEOGRA…

LOCAL HISTORY &…

OF THE

# MADURA DISTRICT.

## III Standard.

மூன்ருவது வகுப்புப் பிள்ளைகளுக்கு

உபயோகமான

# பூகோள சாஸ்திரம்.

மதுரை ஜில்லா.

R. SUBRAMANIA SARMA,

*, A. M. H. School, and Training Institution,*

PASUMALAI.

AND

DEVARAJ MOSES,

*Deputy Inspector of Schools, Rangoon.*

*Published by*

**E. M. Gopalakrishna Kone,**

MADURA.

**2nd EDITION.**

*Copy Right Registered]* 1913. [PRICE 3 ANNAS

…REGISTRAR… MADRAS 191…

TAMIL SANGAM …

# மூன்றாம் வகுப்புப்

# பூகோள சாஸ்திரம்.

## மதுரை ஜில்லா.

OFFICE OF THE REGISTRAR ... BOOKS
REGISTERED
DEC 1913
MADRAS.

சட்டப்படி வேண்டியவைகள் சித்திரப் படங்களுடன்
நன்கு விளக்கப்பட்டுள்ளன.

---

பசுமலை
உயர்தர, டிரயினிங், கலாசாலைகளின்
தலைமைத் தமிழ்ப் பண்டிதர்
நே. ரா. சுப்பிரமணிய சர்மா அவர்களும்
இரங்கூன் இலாகா பாடசாலைகளின் டிப்டி இன்ஸ்பெக்டர்
தேவராஜ் மோஸஸ் அவர்களும்
எழுதியது.

---

மதுரை புதுமண்டபம் புஸ்தக வியாபாரி
இ. டா. கோபாலகிருஷ்ணக்கோனாரால்
மதுரைத் தமிழ்ச்சங்கம் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.
இரண்டாம் பதிப்பு

---

ாப்பிரைட் ரிஜிஸ்டர்] 1913. [விலை அணா 3.

# PREFACE.

---

This is the Second Edition of the Geography of the New Madura District. The first edition was published last year with 6 illustrations; but this one has been improved by the addition of more plates to make the book more useful.

Our thanks are due to some of our friends for their valuable suggestions in the preparation of this edition.

Any further suggestions in the same direction will be thankfully received.

Madura.<br>
1—6—1913

The Authors.

# முகவுரை.

இராமநாதபுரம் ஜில்லா ஏற்பட்டபிறகு புதிய மதுரையைப்பற்றிப் புதிய சட்டத்திற்கு ஏற்றபடி முதலில் யாமே எழுதினோம்.

இதில், ஸ்கேலின்படி படம் எழுதும் விதத்தை நன்றாய் விளக்கியிருக்கிறோம். அதை விளக்குகையில் உபாத்தியாயர் பிள்ளைகளுக்கு ஸ்கேல் முதலியவற்றைக் கொடுத்து அவர்களுக்கு அவைகளைத் தக்கபடி உபயோகிக்கும் முறையைக் கற்பிக்கவேண்டும். தெரிந்த விஷயத்தைக்கொண்டு தெரியாத விஷயங்களைக் கற்பித்தலே முறையாதலால், பள்ளிக்கூடம் இருக்கும் கிராமத்தைப்பற்றிக் கற்பித்த பின்னரே உபாத்தியாயர் ஜில்லாவைப்பற்றிக் கற்பிக்க வேண்டும். பூகோள சம்பந்தமான பதங்களை விளக்குகையில் உபாத்தியாயர் பிள்ளைகளுடன் வெளிப் பக்கங்களில் போய் அங்கங்குள்ள விஷயங்களைக் கவனிக்கச் செய்யவேண்டும். நிற்க.

இந்த ஜில்லாவின் இயற்கை அமைப்பின்படி நில வகைகளைப் பிரித்து, அவை ஒவ்வொன்றிலும் உண்டாகும் பொருள்களை நன்றாய்க் காட்டியிருக்கிறோம்.

ஸ்கேல் விபரம், திசைகள், பூமியின் உருவம், பூகோள சம்பந்தமான பதவிளக்கம், ஜில்லாவின் இயற்கை அமைப்பு, ராஜாங்க பிரிவினை, ஆகிய இவைகளை விளக்குவதற்குப் படங்களைச் சேர்த்து முதற்பதிப்பை வெளியிட்டோம். இப்பதிப்பில், மதுரை, திருமலைநாயக்கர் மஹால், மீனாக்ஷி அம்மன் கோவில், தெப்பக்குளம் ஆகிய இவற்றின் படங்களையும், ஜில்லாவின் சரித்திரத்தையும், துரைத்தன விளக்கத்தையும் வேறு சில விஷயங்களையும் சேர்த்து இதை வெளியிடுகிறோம்.

மதுரை,
1—6—1913.

N. R. S. & D. M.

நமது இந்தியா சக்கரவர்த்தியாகிய

# ஐந்தாம் ஜார்ஜ் மன்னர்

## வாழ்த்துப் பாட்டு.

"வீடலால" என்ற வர்ணமெட்டு.

சக்ரவர்த்தி ஆகும் ஐந்தாம் ஜார்ஜ்மன்னன் வாழ்கவே.
மிக்க கீர்த்தி பெற்ற ராணி மேரியென்றும் வாழ்கவே. (1)

மக்கள் சுற்றம் ஆதி யோர்கள் மன்னிமேலும் வாழ்கவே.
திக்கனைத்தும் போற்றும் இந்ய தேசமென்றும் வாழ்கவே. (2)

கப்ப மீயும் அரசர் தாமும் கனமிகுந்து வாழ்கவே.
ஒப்பி லாத ஆங்கி லேயர் ஓங்கிலங்கி வாழ்கவே. (3)

கல்வி ஓங்க நிதியம் ஈந்த கருணைவள்ளல் வாழ்கவே.
செல்வராய ஏழாம் எட்வர்ட் செல்வன் என்றும் வாழ்கவே. (4)

அருக்கன் அஸ்த மன மில்லாத அவனிநாதன் வாழ்கவே.
உருக்க மாக நம்மை ஆளும் உளத்தன் ஜார்ஜ் வாழ்கவே. (5)

# Requirements of the Educational Code.

:o:

## புதிய சட்டத்திற் கூறியபடி மூன்றுவது வகுப்பிற்கு வேண்டிய பூகோள பாகம்.


:o:

1. வகுப்பு அல்லது பாடசாலையின் பிளானைக் கொண்டு ஸ்கேல் இன்னது என்று கற்பித்தல்.


2. பள்ளிக்கூடம் இருக்கும் கிராமம் அல்லது பட்டணத்தைப்பற்றிப் படத்தின் மூலமாய்க் கற்பித்தல்.

3. பள்ளிக்கூடமிருக்கும் கிராமம் அல்லது பட்டணத்தைச் சுற்றிலு முள்ளவைகளி லிருந்து திருஷ்டாந்தப் படுத்தக்கூடிய பூகோள சம்பந்தமான பதங்களை விளக்கிக் காட்டுதல்.

(4) ஜில்லாவைப்பற்றித் தெரிவித்தல்.





படத்தின் திசை அறிதல் பக்கம் **11—12.**



மதுரை ஜில்லா.
SCALE 21⅓ MILES, TO 1 INCH
பழனி மலைகள்
கொடைக்கானல்மலை
சிறுமலை
அழகர்மலை
யானைமலை
நாகமலை
பசுமலை
ஸ்கந்தமலை
வைகை
பெரியாறு
மஞ்சள்நதி
வராகநதி
தேனி ஆறு
குண்டாறு
சுருளிநதி
மேற்குமலைத் தொடர்ச்சி
வருஷநாட்டு மலைகள்
பெரியாற்று ஏரி.
77
77·15
77·30
77·45
78
78·15
78·30
78·45
10·45
10·30
10·15
10
9·45
9·30

# பூகோள சாஸ்திரம்.



## ஸ்கேல் விபரம்.

பிளான்:—சிறுவர்களே! உங்களுடைய கற்பலகையின் மேல் ஒரு புஸ்தகத்தை வைத்து அதைச் சுற்றிலும் பென்சிலால் கோடுகள் போடுங்கள். பிறகு அப்புத்தகத்தை எடுத்துவிடுங்கள். இப்போது, நாற்கோண வடிவமாக உங்களுடைய கற்பலகையில் எழுதியிருப்பது எதனுடைய படம் என்று கேட்டால், அது 'புத்தகத்தின்படம்' என்பீர்கள். அப்படத்திற்குக் கனமாவது உருவமாவது உண்டா? இல்லை. பின்னர் அதை அந்தப் புத்தகத்தின் படம் என்று ஏன் சொல்லுகிறீர்கள்? அது அப்புத்தகத்தின் அகலத்தையும் நீளத்தையும் தெரிவிப்பதால் தானே?

ஆதலால், நீளத்தையும் அகலத்தையும் தெரிவிக்கும் படத்திற்கு பிளான் என்று பெயர் எனத் தெரிந்து கொள்ளுங்கள்.

இனி, உங்கள் வகுப்பு அறையின் பிளானை வரைய வேண்டுமானால் அதற்கு முதலில் வகுப்பு அறையின் நீளமும் அகலமும் தெரியவேண்டும் அல்லவா?

அறையை அளப்பதற்காக உங்கள் உபாத்தியாயர் உங்களுக்கு கொடுக்கும் ஒரு அடி மட்டப் பலகையை வாங்கிக் கொள்ளுங்கள். அதற்குஓர் அடி அளவு கோல் என்று பெயர். உங்கள் வகுப்பு அறை 36 அடி நீளமும், 20 அடி அகலமும், இருக்குமானால் அதை அளக்கும்போது 36 கோல் நீளமும், 20 கோல் அகலமும், இருக்கக் காண்பீர்கள்.

முன், புத்தகத்தின் பிளான் வரைந்தது போலவே கற்பலகையில் இவ்வறையின் பிளானை எழுத முடியுமா? முடியாது. ஏன் முடியாது என்றால், கற்பலகையானது அறையைக் காட்டிலும் எவ்வளவோ சிறிது என்பீர்கள். உங்களுடைய கறுப்புப் பலகையிலும் வரைய முடியாதென்று நீங்கள் எண்ணலாம். ஆனால், அதை எழுதுவதற்கு ஓர் உபாயம் இருக்கிறது.

உங்கள் கையில் இருக்கும் மட்டப்பலகையின் சப்பட்டையான பாகத்தைக் குறிப்பாய்ப் பார்த்தால், அது பன்னிரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு இருப்பதைக் காண்பீர்கள். அந்த ஒவ்வொரு பாகத்திற்கும் ஒரு அங்குலம் என்று பெயர். இனி அறையின் பிளானை எழுதவேண்டுமானால் உங்களிடம் கொடுத்திருக்கும் மட்டப் பலகையின் ஓர் அங்குலத்தை ஒவ்வொரு அடியாகப் பாவித்துக் கறுப்புப் பலகையில் பிளானை எழுதுங்கள். அப்பொழுது அறையின்

நீளமாகிய 36 அடியானது 36 அங்குலமாகவும், அகலமாகிய 20 அடியானது 20 அங்குலமாகவும், கறுப்புப் பலகையில் எழுதிய படத்தில் அமையும்.

இனி, உங்களுடைய கற்பலகையிலும் அறையின் பிளானை வரையலாம். எப்படியெனில், ஒவ்வொரு அங்குலத்தையும் 4 அடியாக பாவித்து எழுதுங்கள். இப்பொழுது, அறையின் நீளமாகிய 36 அடியானது 9 அங்குலமாகவும், அகலமாகிய 20 அடியானது 5 அங்குலமாகவும் அமைந்திருக்கும்.

இப்படியே, ஒரு அங்குலத்தை 10 அடியாகவும், 100 அடியாகவும், 1000 அடியாகவும், பாவித்துப் படங்கள் வரையலாம். இவ்வாறே சிறிய உருவத்தை பெரிய அளவில் எழுதலாகும். இப்படி எழுதுவதற்குத்தான் "ஸ்கேலின்படி எழுதுதல்" என்று பெயர்.

நீங்கள் எடுத்துக்கொண்ட இஷ்டமான ஸ்கேலின்படி உங்கள் பள்ளிக்கூடத்தையும், கிராமத்தையும், தாலூகாவையும், ஜில்லாவையும் எழுதலாம். ஆனால் இன்ன அளவு இன்ன அளவாக, பாவித்து எழுதப்பட்டிருக்கிறது என நீங்கள் எழுதிய படத்தில் குறிக்கவேண்டும்.

பசுவின் படத்தை நீங்கள் பார்த்தால், அதில் பசுவினுடைய உறுப்புக்களாகிய தலை, கால்கள், வால் முதலியன தெரியும் அல்லவா? அதுபோலவே உங்களுடைய ஜில்லாவின் படத்தைப் பார்த்தால் அதில் ஜில்லாவின் உறுப்புக்களாகிய மலைகள், ஆறுகள், ஏரிகள், பட்டணங்கள் முதலியவற்றை அறிவதோடு ஸ்கேலின்படியும் அறியலாகும்.

# கிராமம்.

——:o:——

கிராம மூலமாகவும், நேராகவே உபாத்தியாயருடன் கிராமங்களின் சுற்றுப்பக்கங்களுக்குப் போயும் பிள்ளைகள் கிராமங்களைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டும். அப்பொழுது அவர்கள் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயங்களாவன:—

1. கிராமத்தை அடுத்த மலைகள் ஆறுகள் ஏரிகள்.

2. அந்தக் கிராம நிலத்தின் தன்மை—கரிசல், செவ்வல், பாறை முதலியவைகள்.


3. அங்கு விளையும் பொருள்கள்—நன்செய்ப் பயிர், புன்செய்ப் பயிர், உயிர்ப் பிராணிகள், உலோகங்கள் முதலியன.


4. கிராமத்தாரின் கைத்தொழில்—பயிரிடல், ஆடு மாடு மேய்த்தல், நெசவு, வியாபாரம் முதலியன.

5. அங்கு வழங்கும் பாஷைகளும், மதமும், நடை உடை பாவனைகளும்.

6. கிராம ஆளுகையைப்பற்றிய குறிப்பு.

# திசைகள்.



சூரியன்.

## பூமியின் திசைகளை அறிதல்.

பிள்ளைகளே!

அதிகாலையில் நீங்கள் எழுந்திருந்தால் வர வர இருட்டு மறைந்து வெளிச்சம் வரக்காண்பீர்கள். இவ்வெளிச்சத்திற்குக் காரணம் என்ன? சூரியன் உதிப்பதே.

எந்தத்திசையில் சூரியன் உதிக்கிறதோ அந்தத் திசைதான் கிழக்கு. வெளிச்சம் வர வர அதிகரிக்கக் காண்பீர்கள். ஆனால் மாலை வேளையில் நீங்கள் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்புகையில் வர வர வெளிச்சம் குறைந்து, இருட்டு வருவதையும் பார்த்திருப்பீர்கள். அம்மாலைவேளைகளில் சூரியன் அஸ்தமிக்கும் திசையே மேற்கு. சூரியன் உதித்திருக்கையில் நீங்கள் சூரியனைநோக்கி நிற்கும்பொழுது உங்கள் வலதுகைப் பக்கம் இருக்கும் திசை தெற்கு. இடதுகைப் பக்கம் இருக்கும் திசை வடக்கு ஆகும்.

## படத்தில் திசைகளை அறிவது.

—:o:—


பூமியின் திசைகளை அறியும் வகையை நீங்கள் தெரிந்துகொண்டீர்கள். ஆனால் படத்தில் திசைகளை எப்படி அறிவீர்கள்?

படத்திற்கு எதிரே நீங்கள் நின்ருல், படத்தின் தலைப் பக்கம் வடக்கு ; அடிப் பக்கம் தெற்கு ; உங்களுடைய வலது கைப் பக்கம் கிழக்கு; இடதுகைப் பக்கம் மேற்கு என்று தெரிந்துகொள்ளுங்கள்.

## பூமியின் உருவம்.

—:o:—

பூமியைப்பற்றிக் கற்பிக்கும் புஸ்தகத்திற்கு " பூகோள சாஸ்திரம் " என்று பெயர். நாம் வசிக்கும் இந்தப் பூமியானது கிச்சிலிப் பழம்போல் உருண்டையாய் இருக்கிறது. ஆனல் பார்வைக்குத் தட்டையாயிருப்பதாய்த் தோற்றுகிறது. ஏனெனில், பூமி முழுவதையும் ஒரே தடவையில் நீங்கள் பார்க்கமுடியாதபடி அது அதிகப் பெரிய உருவமாய் இருப்பதால்தான்.



மேலேயுள்ள படத்தில், ஒரு இடத்திலிருந்து மற்ருெரு இடத்திற்குப்போய்க்கொண்டிருக்கும் கப்பலை நீங்கள் பார்த்தால், முதலில் அந்தக் கப்பலின் அடிப்பாகமும், அக்கப்பல் தூரப்போகப் போக மேல் பாகங்களும் கொஞ்சங் கொஞ்சமாய் மறையக் காண்பீர்கள். பூமி உருண்டையாயிருப்பதால்தான் அப்படித் தெரிகிறது. உருண்டையில்லாமல் தட்டையா யிருந்தால் அந்தப் பாகங்கள் மறையக் காரணம் இல்லையே.

நாம் வசிக்கும் உருண்டை வடிவமாகிய இந்த பூமியை 5 பாகங்களாய்ப் பிரித்து அதில் மூன்றுபங்கு நீராலும், இரண்டு பங்கு நிலத்தாலும் ஆகியது என கண்டுபிடித்திருக்கிறார்கள்.

---

## பூகோள சம்பந்தமான பதவிளக்கம்.

———:o:———



## நிலப்பிரிவுகள்.

நீங்கள் உங்கள் ஊரிலுள்ள கண்மாய்க்கரை மீதிலாவது அல்லது ஏதாவது ஓர் உயர்ந்த இடத்திலாவது நின்று கொண்டு நான்கு பக்கங்களிலும் சுற்றிப்பார்த்தால் நிலப்பாகமும் நீர்ப்பாகமும் வேறு வேறாய்ப் பிரிந்து இராமல் எல்லாம் சேர்ந்து இருப்பதைக் காண்பீர்கள். இப்படிப் பட்ட மிகப் பெரிய பாகத்திற்கு **கண்டம்** என்று பெயர். (உ - ம்) ஆசியாகண்டம். இந்தக் கண்டத்தின் ஓர் பாகமாகிய இந்தியா தேசத்தில்தான் நாம் வசிக்கிறோம்.

தீவு—உங்கள் ஊரிலுள்ள தண்ணீர் நிரம்பிய வயல்களுக்குப்போய் நீங்கள் அவைகளைச்சுற்றிப் பார்த்தால், சில வயல்களின் நடுவில் சுற்றிலுமுள்ள மண்ணைவெட்டி மத்தியில் ஓர் திட்டாகப் போட்டிருப்பதைப் பார்ப்பீர்கள். அதைச் சுற்றிலும் தண்ணீர் நிரம்பி யிருக்கும். அதுபோலவே, எல்லாப் பக்கங்களிலும் தண்ணீர் சூழ்ந்திருக்கும் ஓர் நில பாகத்திற்குத் தீவு என்று பெயர். (உ - ம்) இராமேசுவரம் தீவு.

3. தீபகற்பம்—மழை பெய்த பிறகு வெளியில்போய் நீங்கள் பார்த்தால் சில இடங்களில் முற்றிலும் அல்லாமல் கொஞ்சம் குறைய நீர் சூழ்ந்திருக்கும் தரைப் பாகங்களை பார்த்திருப்பீர்கள். அதைப் போலவே, மிகவும் பெரியதாய் அநேகமாய் நீரால் சூழப்பட்ட பூபாகத்திற்குத் தீபகற்பம் என்று பெயர். (உ - ம்) நாம் வசிக்கும் இந்தியா.

4. பூசந்தி—இரண்டு பக்கமும் மேடுள்ளதும் நீர் நிரம்பியதுமான வயலில் போய்ப்பார்த்தால் இரண்டு மேடு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS MADRAS 1913

களையும் சேர்த்து வயலிலுள்ள நீரைப்பிரிக்கும் வரப்பைப் பார்த்திருப்பீர்கள். அதுபோலவே, இரண்டு பெரிய நில பாகங்களை சேர்த்து இரண்டு பெரிய ஜலபாகங்களைப் பிரிக்கும் பூபாகத்திற்குப் பூசந்தி என்று பெயர். (உ - ம்) ஐரோப்பாவிலுள்ள கோரிந்து பூசந்தி.

5. முனை—மழை பெய்தவுடன் வெளியில் போய் நீங்கள் பார்த்தால், எங்கும் தண்ணீர் ஓடிக்கொண்டிருக்க தரையில் ஓர்பாகம் குறுகி மேடாய்த் தண்ணீரில் நீட்டிக்கொண்டிருப்பதைச் சிலசமயங்களில் பார்த்திருப்பீர்கள். அது மாதிரியே சமுத்திரங்களிலும் ஒடுங்கிக் கூர்மையாய் நீண்டிருக்கும் பூபாகத்திற்கு முனை என்று பெயர். (உ - ம்) இந்தியாவின் தெற்குக் கோடியாகிய கன்னியாகுமரி முனை.

6. மலை—மேடு குவிந்திருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அம் மேடுபோலவே, பூமி மட்டத்திற்கு மேல் மிகவும் உயர்ந்து இருப்பதற்கு மலை என்று பெயர். (உ - ம்) பழனி மலை.

7. மலைத்தொடர்ச்சி—பல மலைகள் ஒன்றோடு ஒன்று அடுத்து அடுத்துச் சேர்ந்திருப்பதற்கு மலைத்தொடர்ச்சி என்று பெயர். (உ - ம்) மேற்குத் தொடர்ச்சி மலை.

8. குன்று—மலையிலும் சற்றுச் சிறிதாய் மரஞ் செடிகள் அதிகமாய் முளைக்காத சிறு மலைக்கு குன்று என்று பெயர். (உ - ம்) யானைமலை.

9. பள்ளத்தாக்கு—இரண்டு மலைகளுக்கு ஊடேயுள்ள தாழ்ந்த பூமிக்கு பள்ளத்தாக்கு என்று பெயர். (உ - ம்.) கம்பம் பள்ளத்தாக்கு.

10. காடு—அநேக செடிகொடிகள் அடர்ந்திருக்கும் விசாலமான தரைபாகத்திற்குக் காடு என்று பெயர். (உ - ம்) அழகர் கோவில் காடு.

11, பீடபூமி—மலையில் சில இடங்கள் சமமான வெளி யாயிருக்கும். அதற்கு பீடபூமி என்று பெயர். (உ - ம்) தக்ஷிணபீடபூமி.

## நீர்ப் பிரிவுகள்.

மகா சமுத்திரம்—உங்களுடைய ஊரில் சிறிய பள்ளங்க ளில் நீர் தேங்கியிருப்பதைப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? அதுபோல கண்ணுக்கு எட்டாத அளவு பரவி உப்பு நீரை யுடைய ஜல பாகத்திற்கு மகாசமுத்திரம் என்று பெயர். அநேகமாய் பெரிய நதிகளெல்லாம் சமுத்திரங்களிலேயே போய் விழுகின்றன. (உ - ம்) இந்துமகா சமுத்திரம்.

2. கடல்—இது சமுத்திரத்தைப் பார்க்கிலும் சற்று சிறிதான உப்பு நீர்ப் பாகம். (உ - ம்) நம்முடைய தேசத்தி ற்கு மேற்கிலுள்ள அராபிக் கடல்.

3. விரிகுடா—விரிந்த வாயுடன் பூமிக்குள் செல்லும் ஜலபாகம் விரிகுடா எனப்படும். (உ - ம்) நமது தேசத் திற்குக் கிழக்கிலிருக்கும் வங்காள விரிகுடா.

4. வளைகுடா—குறுகிய வாயுடன் பூமிக்குள் செல் லும் ஜலபாகத்திற்கு வளைகுடா என்று பெயர். (உ - ம்) பார் ஸீக வளைகுடா.

5. ஜலசந்தி—நீர் நிரம்பிய இரண்டு வயல்களுக்கு ஊடேயுள்ள வரப்பை வெட்டிவிட்டால் என்ன ஆகும்? அவ்விரண்டு வயல்களிலுமுள்ள தண்ணீரும் குறுகிய நீர்ப்

பாகத்தால் சேர்க்கப்படும். அதுபோல, இரண்டு பெரிய ஜல பாகங்களைச் சேர்த்து இரண்டு பூபாகங்களைப் பிரிக்கும் ஜல பாகத்திற்கு ஜலசந்தி என்று பெயர். (உ-ம்) இந்தியாவிற்கும் இலங்கைக்கும் மத்தியிலிருக்கும் பாக்ஸ் ஜலசந்தி.

6. ஏரி—நான்கு பக்கங்களிலும் தரைசூழ்ந்த ஜல பாகத்திற்கு ஏரி என்று பெயர். (உ-ம்) மாடக்குளத்து ஏரி.

7. நதி—மழை பெய்தவுடன் நீங்கள் வெளியே போய்ப் பார்த்தால் தண்ணீரெல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து பள்ளமான இடத்தை நோக்கிச் செல்வதைப் பார்த்திருப்பீர்கள். அதுபோல உயர்ந்த மலைகளில் உற்பத்தியாகிப் பள்ளத்தை நோக்கிச் செல்லும் நீர்ப்பாகத்திற்கு நதி என்று பெயர். (உ-ம்) இந்த ஜில்லாவிலுள்ள வைகை.

8. உபநதி—ஒரு நதியில் வந்து கலக்கும் சிறு ஆற்றுக்கு உபநதி என்று பெயர். (உ-ம்) வைகையின் உபநதியாகிய சுருளி.

9. கிளைநதி—ஒரு நதியிலிருந்து பிரிந்து செல்லும் ஆற்றுக்குக் கிளைநதி என்று பெயர். (உ ம்) வைகையின் பிரிவாகிய கிருதமாலை.

---

## ஜில்லா.

—:o:—

நம்முடைய இந்தியாவைப் பல ராஜதானிகளாகப் பிரித்திருக்கிறார்கள். அவைகளில் சென்னை ராஜதானி ஒன்று. சென்னை இராஜதானி 25 பாகங்களாகப் பிரிக்கப்


பட்டிருக்கிறது. ஒவ்வொரு பிரிவிற்கும் ஜில்லா என்று பெயர். சென்னை ராஜதானியின் 25 ஜில்லாக்கள்:—

1. கஞ்சம்.
2. விசாகபட்டணம்.
3. கோதாவரி.
4. கிருஷ்ணு.
5. குண்டூர்.
6. நெல்லூர்.
7. மதராஸ்.
8. செங்கற்பட்டு.
9. தென் ஆற்காடு.
10. தஞ்சாவூர்.
11. இராமநாதபுரம்.
12. திருநெல்வேலி.
13. மலையாளம்.
14. தென் கன்னடம்.
15. கடப்பை.
16. கர்நூல்.
17. பல்லாரி.
18. அனந்தபுரம்.
19. சித்தூர்.
20. வட ஆற்காடு.
21. சேலம்.
22. கோயம்புத்தூர்.
23. திருச்சிராபள்ளி.
24. மதுரை.
25. நீலகிரி.

## மதுரை ஜில்லா.

—:o:—

நீங்கள் வசிக்கும் இந்த ஜில்லாவிற்கு மதுரை என்று பெயர். உங்கள் சொந்த நாட்டின் பெயரைக் கேட்பது உங்கள் காதிற்கு இன்பமாய் இருக்கும் என்று எண்ணு கிறேன். பூர்வகாலம் தொட்டுப் பேர்பெற்ற இந்நாட்டைப் பற்றி அறிவது அவசியமல்லவா?



மதுரைஜில்லா.
SCALE 16. MILES TO 1 INCH.
கோயம்புத்தூர்ஜில்லா
திருச்சிராப்பள்ளி ஜில்லா
புதுக்கோட்டை
இராமநாதபுரம் ஜில்லா
திருவாங்கூர்ராஜ்ஜியம்
பழனி தாலூகா
கீரனூர்
பழனி
திண்டுக்கல் தாலூகா
திண்டுக்கல்
வடமதுரை
அய்யலூர்
கன்னிவாடி
அம்பாத்துரை
கொடைக்கானல் தாலூகா
பூம்பாரை
கொடைக்கானல்
நிலக்கோட்டை தாலூகா
நிலக்கோட்டை
வத்தலகுண்டு
அம்மையநாயக்கனூர்
சோளவந்தான்
மேலூர் தாலூகா
அழகர்கோவில்
மேலூர்
திருவாதவூர்
பெரியகுளம் தாலூகா
பெரியகுளம்
போடிநாயக்கனூர்
உத்தமபாளையம்
மதுரை தாலூகா
சமையநல்லூர்
மதுரை
பசுமலை
திருப்பரங்குன்றம்
கப்பலூர்
திருமங்கலம் தாலூகா
திருமங்கலம்
சிவரக்கோட்டை
கள்ளிக்குடி
77
77·15
77·30
77·45
78
78·15
78·30
78·45
10·45
10·30
10·15
10
9·45
9·30

இந்த ஜில்லா 1910-ம் வருஷம் வரைக்கும் இராமநாத புரம், சிவகங்கை முதலிய பாகங்களை உடையதாயிருந்தது. ஆனால், இப்போது இதனின்றும் இவ்விருபாகங்களும் புதிதாய் ஏற்படுத்தப்பட்ட இராமநாதபுரம் ஜில்லாவோடு சேர்க்கப்பட்டன.

## எல்லைகள்.

———:o:———

உங்கள் ஜில்லாவின் படத்தைப் பாருங்கள். வடக்கே கோயம்புத்தூர், திருச்சிராபள்ளி ஜில்லாக்களும், கிழக்கே திருச்சிராபள்ளி ஜில்லாவும், புதுக்கோட்டை ராஜ்யமும், இராமநாதபுரம் ஜில்லாவும், தெற்கே இராமநாதபுரம் ஜில்லாவும், மேற்கே மேற்குத் தொடர்ச்சி மலைகளும் இதற்கு எல்லைகளாக இருக்கின்றன.

## பிரிவுகள்.

———:o:———

இந்த ஜில்லாவை நமது துரைத்தனத்தார் எட்டுப் பாகங்களாகப் பிரித்திருக்கிறார்கள். அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தாலூகா என்று பெயர். அவைகளில் மத்தியிலிருப்பது தான் நிலக்கோட்டை தாலுகா. அதைச்சுற்றிலும், மதுரை, திருமங்கலம், பேரியகுளம், கோடைக்கானல், பழனி, திண்டுக்கல், மேலூர் தாலுகாக்கள் இருக்கின்றன.

———

## இயற்கை அமைப்பு.

———o———

இராஜாங்கத்தார் ஆளுவதற்குச் சௌகரியமாக இந்த ஜில்லாவை 8 பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள்.

ஆனால் இயற்கை அமைப்பின்படி இந்த ஜில்லாவை ஐந்து பாகங்களாகப் பிரிக்கலாம். அவையாவன:—

1. மலைப்பிரதேசம்—பழனியைச்சுற்றிய பாகங்கள்.

2. கரிசல் தரை நிலங்கள்—திருமங்கலம் தாலூகாவின் பெரும்பாகம்.

3. நீர்வளமுள்ள பாகம்—பெரியாறும் அதன் கால்களும் பாயுமிடங்கள்.

4. நீரில்லாத செவ்வல் நிலம்—திண்டுக்கல், மேலூர் தாலூகாவின் பெரும் பாகங்கள்.

5. பள்ளத்தாக்கு—பெரியகுளம் தாலூகாவின் பெரும் பாகங்கள்.

இந்நிலங்களின் இயல்புக்குத் தக்கபடி விளைபொருள்கள் இருக்கும். இவ்விஷயத்தை "விளைபொருள்கள்" என்ற தலைப்பின் கீழ்ப் பாருங்கள்.

## மலைகள்.

—o—

1. மேற்குமலைத் தொடர்ச்சி:—இம்மலைத் தொடரானது இந்த ஜில்லாவின் மேற்கு எல்லையாக இருக்கிறது என்று முன்னுலேயே அறிவீர்கள். இத்தொடர் திருநெல்வேலி ஜில்லாவையடுத்த கன்னியா குமரியிலிருந்து வடக்கே வெகுதூரம்வரை மேற்குக்கரை ஓரமாகப் பரவியிருப்பதால் இதற்கு மேற்கு மலைத் தொடர்ச்சி என்ற பெயர் வந்தது. இத்தொடர் திருவாங்கூர் இராஜ்யத்தை ஒட்டியிருப்பதால்

இதற்கு திருவாங்கூர் மலைகள் என்றும் பெயருண்டு. இம் மலைத்தொடர் அதிக உயரமுள்ளது. இதில் தேக்கு முதலிய பல பெரிய மரங்கள் வளரும். யானைகளும் ஏராளமாய் உண்டு. இதன் ஓர் பாகம் ஏலக்காய் மலைகள்.

2. பழனிமலை:—இது மேற்குத் தொடர்ச்சியின் ஓர் கிளைதான். இதன் நீளம் சுமார் 50 மைல். இம்மலையின் ஓர் பாகமாகிய கோடைக்கானல்மலைக்குத் தான் அமெரிக்க, ஐரோப்பிய மிஷனரிகளும், உத்தியோகஸ்தர்களும் தேக சௌக்கியத்திற்காகக் கோடைகாலத்தில் போய்வருகிறார்கள். இதில் ஏராளமான காப்பித்தோட்டங்களும், பேரிக்காய்த் தோட்டங்களும் உண்டு. உங்கள் ஊரில் ஒரு அணுக் கொடுத்து வாங்கும் பேரிக்காயை கொடைக்கானலில் காலணாவிற்கும் குறைச்சலாகவே வாங்கலாம். கடுகு,ஏலம், உருளைக்கிழங்கு, தேயிலை, சீமைக்கீரை வகைகள் இங்கு மிகுதியாய் வளரும்.

3. உயர்ந்த வாவிமலை:—பழனிமலைக்கு 30 மைல் தூரத்தில் தென் கிழக்குப் பக்கமாயிருக்கிறது. பழனி மலைக்கும் இதற்குமிடையிலுள்ளதே கம்பம் பள்ளத்தாக்கு.

4. இரும்புப்பாறை:—இது மதுரையிலிருந்து 15 மைல் வடக்கேயிருக்கிறது. படிகப்பாறை என்பது இதன் சமீபத்திலுள்ள ஒரு சிறு குன்று.

5. வருஷநாடு ஆண்டிப்பட்டி மலைகள்:—வருஷநாடு ஆண்டிப்பட்டி என்னும் இரண்டு ஊர்களை அடுத்திருப்ப தால் இவற்றிற்கு இப்பேர் வந்தது. இவை தென் கிழக்காய்த் திரும்புகையில் இவற்றிற்கு நாகமலை என்றுபெயர்.இவற்றில்

ஏராளமான மழை பெய்கிறது. வைகை இங்குதான் உற்பத்தியாகிறது. மலையின் நீளம் சுமார் 50 மைல்.

7. சிறுமலை:—இதன் நீளம் சுமார் இருபது மைல். இது அதிக செழிப்பான மலைகளில் ஒன்று. ஆனால் மலைக் காய்ச்சல் உண்டாகக்கூடிய இடம். இம்மலையில் உண்டாகும் வாழைப் பழங்கள் மிகப் பிரசித்தமானவை. தேனில் ஊறப்போட்டு இவை பெரும்பாலும் ஐரோப்பாவிற்கு அனுப்பப்பட்டு வருகின்றன. காப்பி, ஏலக்காய் தோட்டங்களும் அங்குண்டு.

8. திண்டுக்கல் குன்று:—இதன் மேல் ஓர் கோட்டையுண்டு. இப்போது இதில் ஒருவரும் குடியில்லை. முன் காலத்தில் இதில் துப்பாக்கி மருந்துசாலை இருந்தது. இதன் உயரம் 300 அடி.

பழனிமலையின் கிழக்கில் நத்தம் என்ற ஓர் கிராமம் இருக்கிறது. அக்கிராமத்தைச் சுற்றி நான்கு திசைகளிலும் நான்கு மலைகளுண்டு. அந்த ஊருக்கு வடக்கில் இருப்பது தான் கரண்ட மலை. இதே மாதிரியாகக் கிழக்கில் சிறுமலையும், தெற்கில் அழகர்மலையும், மேற்கில் நத்தம் மலையும் இருக்கின்றன.

9. அழகர்மலை:—இது மதுரைக்கு வடக்கே 12 மைல் தூரத்தில் இருக்கிறது. இதன் அடிவாரத்தில்தான் கள்ளழகர் கோவில் இருக்கிறது. இதில் மரம் அடர்ந்த காடுகளுண்டு.

10. ஸ்கந்தமலை:—பசுமலைக்குத் தென்மேற்கே இரண்டு மைல் தூரத்தில் இருக்கிறது. இதன்மேல் ஹிந்துகோவி

லும், மகம்மதிய கோரியும் உண்டு. இதில் குடிப்பதற்கு நல்ல ஜலம் கிடைக்கும்.

11. யானைமலை:—இது தூரப்பார்வைக்கு ஒரு யானையின் உருவத்தை ஒத்திருப்பதால் இதற்கு இப்பெயர் வந்தது. மதுரைக்கு வடக்கே ஆறு மைல் தூரத்தில் இருக்கிறது.

12. பசுமலை:—மதுரைக்கும் இம்மலைக்கும் இரண்டு மைல் தூரம். இதில் அநேக விதமான உலோகங்கள் இயற்கையில் அகப்படுகின்றன.

13. நாகமலை:—இது ஆண்டிப்பட்டி மலைகளின் தொடர்ச்சி. மதுரையின் மேற்கில் பத்து மைல் தூரத்தில் இருக்கிறது. இதில் மரஞ்செடிகள் விசேஷமாய் கிடையா.

கடைசியிற் சொல்லப்பட்ட மூன்றும் அநேக வருஷங்களுக்குமுன் மதுரையை அழிக்கும்படி க்ஷமணர்களால் ஏவப்பட்ட யானை, பசு, நாகம் மூன்றும் வதையுண்ட இடமாகப் புராணம் சொல்லுகிறது.

## ஏரிகள்.

—o—

இந்த ஜில்லாவில் உள்ள ஏரிகள் எல்லாம் மிகச்சிறியவை. ஜனங்கள் தங்கள் உபயோகத்திற்காக வெட்டிக் கொண்டவைகளே யல்லாமல் இயற்கையில் அமைந்தன வல்ல.

பெரியாற்று ஏரி:—நமது கருணை தங்கிய கவர்ன்மெண்டார் அநேககோடி திரவியம் செலவழித்து இந்த ஏரியை உண்டாக்கி யிருக்கிறார்கள். இந்த ஏரியில் இருந்து

தான் பெரியாற்றுக்குத் தண்ணீர் வருகிறது. இந்த ஏரி கட்டப்பட்டுச் சில வருஷங்கள் ஆகின்றன.

மாடக்குளத்து ஏரி:—இது மதுரையி லிருந்து இரண்டு மைல் தூரத்திலுள்ளது. இது உடைந்தால் மதுரைக்கு அழிவு உண்டாகக்கூடும்.

## நதிகள்.

——o——

மழை காலத்தில் இந்த ஜில்லாவில் மழை ஏராளமாகப் பெய்கிறது. மேற்கேயுள்ள மலைப்பிரதேசங்களில் மற்றப் பாகங்களைப் பார்க்கிலும் மழை அதிகம். ஆனால் ஆறுகள் அதிகமாக இல்லை. கோடை காலத்தில் இந்த ஜில்லாவின் முக்கிய நதியாகிய வைகையிலும் ஜலம் கிடையாது.

வைகை:—இதுதான் இந்த ஜில்லாவில் பெரியநதி. இது பெரியகுளம் தாலூகாவிலுள்ள வருஷநாடு-ஆண்டிபட்டி மலைகளில் உற்பத்தியாகி வடகிழக்காய் அத்தாலுகாவின் வழியாய் ஓடி, நிலக்கோட்டைத் தாலூகாவிலுள்ள வண்ணம் பட்டி என்னும் ஊருக்கு வடமேற்கே இரண்டு மைல் தூரத்திலிருந்து தென்கிழக்காய்த் திரும்பி, நிலக்கோட்டைத் தாலூகா மதுரைத் தாலூகாக்களின் வழியாகப் பாய்ந்து ராமனாதபுரம் ஜில்லாவில் பிரவேசித்து, ஆற்றங்கரை என்ற ஊருக்குச் சமீபத்தில் கடலில் விழுகிறது. ஒரு நதி சமுத்திரத்தில் விழுமிடத்திற்கு முகத்வாரம் என்று பெயர். இதன் உபநதிகள்: சுருளிநதி, தேனீநதி, வராகநதி, மஞ்சள் நதி என்பவைகளே. வைகைக்கு வேகவதி என்றும் பெயருண்டு. ஏனெனில், மழை காலத்தில் இதில் தண்ணீர் வேகமாய்ச்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS MADRAS.

செல்லும். வைகை என்று இதற்கு பெயர் வந்ததற்கு காரணம்:—

மதுரையில் சொக்கருக்கும், மீனாட்சி அம்மனுக்கும் கலியாணம் நடக்கையில் சொக்கருடன் வந்த குண்டோ தரனது தீராத தாகத்தைத் தீர்க்க அது வரவழைக்கப் பட்டதென்பர். நதிவந்ததும், சொக்கர், அவனை அதில் நீர் குடிக்க வைகை (அதாவது கையை வை) என்றதால் அந்த நதிக்கு வைகை என்ற பேர் வந்ததாம்.

பெரியாறு:—இது திருவாங்கூர் ராஜ்யத்தில் ஒருவருக்கும் உதவாமல் காட்டு வழியாய் ஓடிக்கொண்டிருந்தது. சுமார் பதினாறு வருஷங்களுக்கு முன், பென்னிக்விக் என்பவரது விடாமுயற்சியால் அதற்கு ஓர் அணை கட்டி அந்நீரைத் தேக்கி ஆங்கில இராஜ்யத்திலுள்ள தரிசு நிலங்களைப் பாய்ச்ச ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த ஏற்பாடு செய்ததால் நமது கவர்ன்மெண்டுக்கும், நமக்கும் அதிக லாபம்.

அணைகட்டித் தேக்கிய தண்ணீரை மலையில் புதிதாய்த் துளைத்த ஓர் கால்வாயின் வழியாய் சுருளி யாற்றில் கலக்கும்படி ஏற்பாடுசெய்யப்பட்டு, அந்தத் தண்ணீர் முழுவதும் வைகை ஆற்றின் வழியாய்ச் சென்று விடாமல் நிலக்கோட்டைத் தாலூகாவிலுள்ள அணைப்பட்டி என்னும் கிராமத்திற்கு அருகில் ஓர் அணையிலிருந்து பிரிக்கப்படுகிறது. அங்கிருந்து வரும் நீர்தான் பன்னிரண்டு சிறு கால்வாய்களின் மூலமாய் மேலூர் தாலூகா நிலங்களுக்குப் பாய்ச்சப்படுகிறது.

இந்த ஏற்பாட்டால் அநேக புன்செய்களை நன்செய்களாக மாற்றி விட்டார்கள். முன் ஒரு போகம்கூட விளையாத வயல்கள் எல்லாம் இப்போது மூன்றுபோகம் விளைகின்றன. இதனால் துரைத்தனத்தார் நமக்காக எவ்வளவு பாடுபட்டு நமக்கு நன்மையைச் செய்து இருக்கிறார்கள் பார்த்தீர்களா ?

குண்டாறு:—இது மேற்குத் தொடர்ச்சிமலையின் ஓர் பாகத்தில் உற்பத்தியாகி, திருமங்கலம் தாலூகாவின் வழியாகப் பாய்ந்து ராமநாதபுரம் ஜில்லாவில் பிரவேசித்து கடலில் விழுகிறது.

வரிசிலை ஆறு:—இது இந்த ஜில்லாவில் வடபாகத்தில் உற்பத்தியாகி மேலூர் தாலூகாவில் பாய்ந்து ராமநாதபுரம் ஜில்லா வழியாய் ஓடி கடலில் விழுகிறது.

இவைகளே முக்கியமான ஆறுகள். இனிவேறு சில சிற்றாறுகளும், ஓடைகளு மிருக்கின்றன:—அமராவதி, ஷண்முகநதி, நன்கங்கை, குடவனாறு. இவற்றில் அமராவதி,ஷண்முகநதி, நன்கங்கை ஆகிய மூன்றும் பழனிமலைகளிலும், குடவனாறு திண்டுக்கல் தாலூகாவிலுள்ள மலைகளிலும் உற்பத்தியாகி வடக்கேநோக்கி கோயம்புத்தூர் ஜில்லாவிற்குப் போகின்றன.

கிருதமால்:—இது வைகையின் கிளைகளிற் பெரியது. வைகையினின்று பிரிந்து பலகண்மாய்களை நிரப்புகிறது.

---

## சீதோஷ்ணஸ்திதி.

சீதம் என்றால் குளிர்ச்சி. உஷ்ணம் என்றால் சூடு. ஸ்திதி என்றால் நிலைமை. ஆகையால் சீதோஷ்ண ஸ்திதி என்பதற்கு ஓர் இடத்தின் குளிர்ச்சியும் வெப்பமும் ஆகிய இவைகளின் நிலைமை என்பதுதான் அர்த்தம்.

இந்த ஜில்லாவில் மலைகளில் குளிர்ச்சி எப்போதும் அதிகமாய்த்தான் இருக்கிறது. மற்றப் பாகம் கோடை காலத்தில் அதிக உஷ்ணமாய் இருக்கிறது. வருஷத்தில் அதிக உஷ்ணமான மாதங்கள் மார்ச்சு, ஏப்ரல், மே, ஜூன் ஆகும். ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் காலமழை பெய்யும். மே, ஜூன் மாதங்களில் சில வருஷங்களில் கோடை மழை பெய்வதுமுண்டு. காலமழை தவறுவதால் ஜனங்கள் மிகவும் கஷ்டப்படுவதுண்டு.

---

## விளைபொருள்கள்.

1. மலைப்பிரதேசம்:—இதில் தேக்கு, வேங்கை முதலிய பெரிய மரங்களும்; வாழை, காப்பி, தேயிலை, கடுகு, ஏலக்காய், ஜாதிக்காய், கடுக்காய், சீயக்காய், உருளைக்கிழங்கு முதலியவைகளும் உண்டாகின்றன.

2. கரிசல்தரை:—இங்கு பருத்தி, காணம், வரகு ஆகிய இவைகள் உண்டாகின்றன.

3. நீர்வளமுள்ள பாகம்:—இதில் நெல்தான் முக்கிய மாய் பயிரிடப்படுகிறது. இன்னும், எள்ளும், சோளமும் தினையும் உபாயமாய் பயிரிடப்படுகின்றன.

4. நீரில்லாத செவ்வல்:—இங்கு நிலக்கடலே, சோளம், துவரை, உழுந்து, கொஞ்சம் கம்பு ஆகிய இவைகள் பயிரிடப்படுகின்றன.

5. பள்ளத்தாக்கு:—இந்த ஜில்லாவில் பள்ளத்தாக்குத் தான் மிகவும் செழிப்பான பாகம். ஆகையால் அதில் அநேகமாய் எல்லாம் உண்டாகும்.

ஆற்றங்கரையின் ஓரங்களில் தென்னே மரங்கள் விசேஷமாய் உண்டாகின்றன.

திண்டுக்கல் தாலூகாவில் நல்ல புகையிலே உண்டாகிறது.

உயிர்ப்பிராணிகள்:—யானே, புலி, ஓநாய், நரி, காட்டுப் பசு முதலிய காட்டுப் பிராணிகளும், பசு, எருமை, குதிரை, ஆடு, நாய், பூனே முதலிய வீட்டுப் பிராணிகளும், பருந்து, கழுகு, வல்லூறு, ஆந்தை, கிளி, மைனு, புரு, காடை, கவுதாரி, கொக்கு, காகம், கோழி, வாத்து முதலிய பக்ஷிகளும் மற்ற ஜில்லாக்களில் போலவே இந்த ஜில்லாவிலும் உண்டு.

உலோகங்கள்—இவை பூமியினின்றும் எடுக்கப்படுகின்றன. பழனிமலேயின் பக்கத்தில் கொஞ்சம் பொன்னும், ஏராளமான இரும்பு, அபிரகம், உப்பு, மரவுப்பு முதலியவைகளும் இந்த ஜில்லாவில் கிடைக்கின்றன. மேலூர்

தாலூகா கொத்தம்பட்டியில் இரும்பு அதிகமாய்க்கிடைக்கிறது. பசுமலைக்குன்றில் சீமைச்சுண்ணும்பு இயற்கையில் கிடைக்கிறது.

தொழில்கள்—பயிரிடுதல், நெசவு, சாயம் ஏற்றல், தோல் பதனிடுதல், ஆடுமாடுகள் மேய்த்தல், வெண்கலப்பாத்திரங்கள் செய்தல், சுருட்டு செய்தல் ஆகிய இவைகளே இந்த ஜில்லா வாசிகளின் முக்கியமான தொழில்கள்.

ஏற்றுமதி—திண்டுக்கல் சுருட்டு, காப்பிக் கொட்டை, பூட்டுகள், தோல், அரிசி, நல்லெண்ணெய், பிண்ணுக்கு, பருத்தி, பருத்திநூல், சாயத்துணிகள், ஜரிகைவஸ்திரங்கள் சரளைக்கற்கள் முதலியன.

இறக்குமதி—இரும்பு ஆயுதங்கள், சாயச்சரக்குகள், சீமைத்துணிகள், கிரோஸின் ஆயில், (மண்எண்ணெய்) கண்ணுடிச் சாமான்கள், பாக்கு, உப்பு, மிளகு, இஞ்சி முதலியவை வெளியிலிருந்து இந்த ஜில்லாவுக்கு அனுப்பப்படுகின்றன.

## போக்குவரவு

### இருப்புப்பாதை.

---

வடக்கே சென்னையிலிருந்து தெற்கே தூற்றுக்குடிக்குப் போகும் இருப்புப்பாதை இந்த ஜில்லாவின் வழியாகவும் போகிறது. மதுரையிலிருந்து இராமேசுவரத்திலுள்ள பாம்பனுக்கும் ஓர் பாதை போகிறது. இவைகளின் மூலமாகப் பெரும்பாலும் இந்த ஜில்லாவில் வியாபாரம் நடக்கிறது.

இந்த ஜில்லாவிலுள்ள முக்கியமான ரயில்வே ஸ்டேஷன்கள்—அய்யலூர், வடமதுரை, திண்டுக்கல், கொடைக்கானல்ரோட், சோழவந்தான், சமயநல்லூர், மதுரை, பசுமலை, திருப்பரங்குன்றம், கப்பலூர், திருமங்கலம், கள்ளிக்குடி ஆகிய இவைகளே.

மதுரை பாம்பன் பாதையில் இந்த ஜில்லாவில் கீழ் மதுரை என்ற ஒரே ஸ்டேஷன் மட்டுமிருக்கிறது. கூடிய சீக்கிரத்தில் மதுரையிலிருந்து உசிலம்பட்டி, போடிநாயக்கனூர் வழியாய் பழனிக்கு ஓர் இருப்புப்பாதை போடப்படுமாம்.

## வண்டிப்பாதை.

1. மதுரையிலிருந்து திருப்பரங்குன்றம், கப்பலூர், திருமங்கலம், ஸ்ரீவில்லிபுத்தூர் வழியாய் திருநெல்வேலிக்குப் போகும் ரஸ்தா ஒன்று இருக்கிறது.

2. மதுரையிலிருந்து போகும் முன் சொன்ன ரஸ்தாவிலிருந்து திருமங்கலத்தில் பிரிந்து கள்ளிக்குடி, விருதுபட்டி வழியாய் திருநெல்வேலிக்கு மற்றோர்பாதை செல்கிறது. அது இருப்புப்பாதையை ஒட்டியே போகிறது.

3. மதுரையிலிருந்து இராமநாத்புரத்துக்கு ஒருபாதை இருப்புப்பாதைக்குச் சமீபமாய்ப் போகிறது.

4. மதுரையிலிருந்து சோழவந்தான், அம்மையநாயக்கனூர், திண்டுக்கல்வழியாய் திருச்சிராப்பள்ளிக்கும் ஒரு பாதை போகிறது.

5. மதுரையிலிருந்து யானைமலை, மேலூர்வழியாய் வடகிழக்கே ஓர் பாதை சிவகங்கை ஜமீன்வழியாய்ப் போகிறது. இவற்றில் சில ரஸ்தாக்கள் இராணி மங்கம்மாள் போட்டவை.

## ஜனங்கள்.

இந்த ஜில்லாவின் ஜனத்தொகை 19,32,862. சுற்றியுள்ள இடங்களிலிருந்து வியாபார முதலியவற்றிற்கு வந்தவர்கள் இந்த ஜில்லாவில் அதிகம். ஆகையால் இந்தியாவிலுள்ள எல்லா ஜாதியாரும் இங்கு இருக்கிறார்கள். நாட்டுக்கோட்டைச் செட்டிகள் என்ற ஜாதியார் இந்த ஜில்லாவில் மதுரையில் கொடுக்கல் வாங்கல் வியாபாரம் செய்கிறார்கள். ஆனால் அவர்களுடைய வீடுவாசல்கள் பெரும்பாலும் இராமநாதபுரம்ஜில்லா ஊர்களிலிருக்கின்றன.

ஸௌராஷ்டிரர் என்ற ஜாதியார் நெசவுவேலைநடத்திக்கொண்டு மதுரைநகரில் விசேஷமாய் வசிக்கிறார்கள். அவர்கள் வெகுகாலத்திற்குமுன்பு குஜராத் மாகாணத்திலிருந்து இங்கு வந்தவர்களாம். இங்குள்ள கள்ளர் என்ற ஜாதியார் பெரியாற்றுக்கால் ஏற்பட்ட பிறகு தங்கள் ஜாதித்தொழிலை விட்டுவிட்டு விவசாயம் செய்துவருகிறார்கள். மறவரும் இங்குண்டு.

மதம்—அநேக ஜாதி இந்துக்களும் இந்த ஜில்லாவில் வசிக்கிறார்கள். மொத்த ஜனத்தொகையில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் இந்துக்கள். மீதிப்பேர்கள் பிற மதஸ்தர்கள். இங்கு கிறிஸ்தவர்களும் சொற்பமாய் உண்டு.

• பாஷை—இந்த ஜில்லாவின் முக்கிய பாஷை தமிழே. தெலுங்கும், கன்னடமும், இந்துஸ்தானியும் சிறிது பேசப் படுகின்றன. ஸௌராஷ்ட்ர பாஷையைச் சிலர் பேசுகிறார்கள். மற்ற ஜில்லாக்களில் போலவே இங்கிலீஷ் பாஷையும் கற்கப்படுகிறது.

---

## தாலூகாக்களும் முக்கிய பட்டணங்களும்.

---

### 1. மதுரைத் தாலூகா.

இந்த ஜில்லாவிலுள்ள மற்ற தாலூகாக்களைப் பார்க்கிலும் இது சிறிது. இந்தத் தாலூகா மேற்கே மேடாகவும் கிழக்கே போகப் போகத் தாழ்ந்தும் இருக்கிறது. வைகை இத்தாலூகாவின் மத்தியிற் செல்லுகிறது.

எல்லைகள்:—வடக்கே நிலக்கோட்டை, மேலூர் தாலூகாக்களும்; கிழக்கே இராமநாதபுரம் ஜில்லாவும்; தெற்கே இராமநாதபுரம் ஜில்லாவும், திருமங்கலம் தாலூகாவும்; மேற்கே திருமங்கலம், நிலக்கோட்டைத் தாலூகாக்களும் இதன் எல்லைகளாம்.

மலைகள்:—ஸ்கந்தர்மலை, பசுமலை, யானைமலை.

ஆறுகள், வைகை. அதன் கிளையாகிய கிருதமாலே.

மதுரை:—இது ஒரு முனிஸிபல் பட்டணம். இந்நகரின் ஓர்பாகம் வைகையின் தென்கரையிலும் ஓர்பாகம் வடகரையிலும் இருக்கிறது. இது இந்த ஜில்லாவின் தலை நகரம்.

தூற்றுக்குடி சென்னை இருப்புப்பாதையும், மதுரை-பாம் பன் பாதையும், சந்திக்கும் இடம் இது. முன் காலத்தில் இது பாண்டியநாட்டின் தலை நகராய் இருந்தது. இதில் அநேக நேர்த்தியான கட்டிடங்கள் உண்டு. நகரின் நடுவில் மீனாக்ஷியம்மன் கோவிலும், அதில் உள்ள ஆயிரக்கால் மண்டபமும், பொற்றாமரை என்றகுளமும், புதுமண்டப மும், கூடலழகர் கோயிலும், எட்வர்ட் பார்க்கும், (Edward-Park) தமுக்கம் பங்களாவும், பார்க்கத்தக்கவை. ஊரின் தென்கிழக்குப் பாகத்தில் திருமலைநாயக்கர் அரண்மனை இருக்கிறது. இந்நகரில் கிறிஸ்தவ ஆலயங்களும், மகம் மதிய பள்ளிவாசல்களு முண்டு.

இவைகளைத்தவிர மதுரை இரண்டாம் வகுப்புக் காலே ஜும், வைகையின் வடகரையிலுள்ள அமெரிக்கன் முதல் வகுப்புக் காலேஜும், 6 ஹைஸ்கூல்களும் இருக்கின்றன. இன்னும் முனிசிபல், மிஷன் ஆஸ்பத்திரிகளும், பஞ்சாபீசும், இருக்கின்றன.

இந்த நகரில் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு திரு விழா நடக்கும். அவைகளில் முக்கியமாகச் சித்திரைத் திரு விழா, பிட்டுத் திருவிழா, தெப்பத்திருவிழாக்களுக்குச் சுற்று வட்டையிலிருந்து ஆயிரக் கணக்கான ஜனங்கள் வந்து போவார்கள்.

ஆதியில் இந்த ஊரில் பாண்டியர்களால் ஆதரிக்கப் பட்ட மூன்று தமிழ்ச் சங்கங்களிருந்தன. இப்போது காலஞ் சென்ற ஸ்ரீ பாண்டித் துரைசாமித் தேவர் அவர்களால் ஏற் படுத்தப்பட்ட மதுரைத் தமிழ்ச்சங்கம் தழைத்து வருகின் றது.

இந்த ஊரில் பட்டுநூல்காரர்கள் மிகவும் அதிகம். அவர்களுடைய பாஷைதான் ஸௌராஷ்டிர பாஷை. அவர்கள் மிகவும் நேர்த்தியான வஸ்திரங்கள் நெய்து அநேக இடங்களுக்கு அனுப்புகிறார்கள். சாயத்தொழிலும் இந்த ஊரில் அதிகம் உண்டு.

பசுமலை—இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். இங்கு ஒரு ஹைஸ்கூலும், டிரயினிங் ஸ்கூலும், மாடல் ஸ்கூலும் கிருஸ்துவமதப் பள்ளிக்கூடமும் உண்டு. இங்குள்ள கிணற்றுத்தண்ணீர் வண்டிகளில் கொண்டுவரப்பட்டு மதுரையில் விற்கப்படும். ரஸ்தா போடுதற்கு இங்கிருக்கும் குன்றிலிருந்து சரளைக்கல் உடைத்துக் கொண்டு போகப்படுகிறது.

திருப்பரங்குன்றம்—இது ஒரு சிறந்த சுப்ரமண்ய ஸ்தலம். கார்த்திகையன்று அநேக ஜனங்கள் பல இடங்களிலிருந்தும் இங்கு வந்து போவதுண்டு. மகமதிய சமாதியும் இங்குள்ள ஸ்கந்தமலையின் ஓர் பாகத்தில் உள்ளது.

வெள்ளியகுன்றம், சிறுவாலை—இவையிரண்டும் இத்தாலூகாவிலுள்ள ஜமீன் ஊர்கள்.

யானைமலை—மதுரைக்கு வடக்கே 5 மைல் தூரத்திலிருக்கிறது. இதில் ஆதிகாலத்தில் கட்டப்பட்ட விஷ்ணு கோயிலிருக்கிறது. யானைமலையில் ஜயின விக்கிரகங்களிருக்கின்றன.

---

## II திருமங்கலம் தாலூகா.

இந்தத் தாலூகா முழுவதும் கரிசல் நிலங்களால் ஆகியது. ஆகையால் அதில் பருத்தி ஏராளமாய்ப் பயிரிடப்

படுகிறது. இங்கு விசேஷமான ஆறுகளில்லை. கிணற்று நீரை இறைத்துத்தான் விவசாயம் நடக்கிறது.

எல்லைகள்—இத்தாலூகாவிற்கு, வடக்கே நிலக்கோட்டை தாலூகாவும்; கிழக்கே மதுரைத் தாலூகாவும், இராமநாதபுரம் ஜில்லாவும்; தெற்கே இராமநாதபுரம் ஜில்லாவும்; மேற்கே பெரியகுளம் தாலூகாவும் எல்லைகளாயிருக்கின்றன.

ஆறு—குண்டாறு.

திருமங்கலம்—குண்டாற்று நதிக்கரையில் இருக்கிறது. இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். இப்போது இந்த ஊர் பெரிதாகிக்கொண்டு வருகிறது. இங்கு வெள்ளிக்கிழமைகளில் ஒரு பெரிய சந்தை கூடுகிறது. பஞ்சாலை இங்கு ஒன்று உண்டு. முனிசிப் கச்சேரியும், தாலூகா கச்சேரியும், முசாபரி சத்திரமும், வைத்தியசாலையும், அமெரிக்கன் மிஷன் சர்ச்சும், ஒரு லோயர் ஸெக்கண்டெரி பாடசாலையும் இங்கு உண்டு. திருமலைநாயக்கர் கட்டிய சிறு மண்டபம் ஒன்று இதற்கு அருகிலிருக்கிறது.

உசிலம்பட்டி—இது ஒரு யூனியன் டவுன். இங்கே டிவிஷனல் ஆபீஸர் கச்சேரியும், சப்ரிஜிஸ்டர் கச்சேரியும், தபாலாபீசும் உண்டு. புதன் கிழமைகளில் இங்கு சந்தை கூடும்.

கள்ளிக்குடி—திருமங்கலத்திலிருந்து 7 மைல் தெற்கே இருக்கிறது. இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். இதற்கு மேற்கே கற்பாறை ஒன்று உண்டு.

கோவிலான்குளம்—இது இத்தாலூகாவின் தெற்கி லுள்ளது. இதற்குச் சமீபத்தில் ஜயினர் கற்சிலையிருக்கிறது.

நடுக்கோட்டை, மேலக்கோட்டை, உத்தமநாயக்கனூர், எழுமலை, சாப்டூர், பேரையூர் முதலியன இத்தாலூகாவில் முக்கிய ஜமீன்கள்.

---

## III பெரியகுளம் தாலூகா.

இதுதான் மதுரை ஜில்லாவிலுள்ள தாலூக்காக்களில் பெரியது. இதற்கு ஆதியில் தென்கரைத் தாலூகா என்று பெயர். மற்றெல்லாத் தாலூகாக்களிலும் மிகச் செழிப் பானதும் ஜமீன்கள் அதிகமாய்க் கொண்டதும் இதுவே. பெரியாறு ஏற்பட்ட பிறகு இத்தாலூகாவின் தென் பாகம் செழிப்பாயிருக்கிறது. இது அதிக ஜனநெருக்கமுள்ள தாலூகா அன்று. இந்தத் தாலூகாவிற்கு மேற்கிலுள்ள திருவாங்கூர் மலைகளில் உண்டாகும் காப்பி, ஏலக்காய், சந்தனக்கட்டை முதலிய மரங்கள் இங்கு வியாபாரமா கின்றன.

எல்லைகள்—கொடைக்கானல் தாலூகா, மஞ்சள் ஆறு, வடக்கிலும்; திருமங்கலம் தாலூகா கிழக்கிலும்; இராம நாதபுரம் ஜில்லா தெற்கிலும்; திருவாங்கூர் மலைகள் மேற்கிலும் இதற்கு எல்லைகளாயிருக்கின்றன.

மலைகள்—திருவாங்கூர் மலைகள், வருஷநாட்டு—ஆண்டி பட்டி மலைகள்.

ஆறுகள்—வைகையாறு, அதன் உபநதிகளில் தேனீ யாறு, வராகநதி, சுருளிநதி, மஞ்சள்நதி.

பெரியகுளம்—இது வராக நதிகரையில் இருக்கிறது. இந்த ஊருக்கு சமீபத்திலுள்ள ஓர் பெரிய குளத்திலிருந்து இப்பெயர் இதற்கு வந்தது. இங்கே டிஸ்டிரிக்ட் முனிசிப் கச்சேரி, தாலூகாகச்சேரி, முனிசிபல் ஆபீஸ், சப்மேஜிஸ்டிரேட் சப்ரிஜிஸ்தார் கச்சேரிகள், சப் போஸ்டு ஆபீசு முதலியன இருக்கின்றன. இதில் ஒரு ஹை ஸ்கூலும் உண்டு. இங்கு தென்கரை, கைகுளான், வடகரை, தேவாரம், என்பன நான்கு ஊர்கள்.

போடிநாயக்கனூர், கண்டமநாயக்கனூர், வடகரை இவைகள் இங்குள்ள முக்கியமான ஜமீன்கள்.

சின்னமனூர்—இது ஒரு யூனியன் டவுன். இங்கே சப்ரிஜிஸ்தார் கச்சேரியும், சுமார் 600 வருஷங்களுக்குமுன் மகம்மதியரால் தோற்கடிக்கபட்ட காலத்தில் இங்கு வந்து தங்கிய ராஜஸிம்ம பாண்டியன் கட்டிய கோவிலும் உண்டு. இங்கு பிராமணர்களும், மகம்மதியர்களும் விஷேமாயிருக்கிறார்கள்.

மாவூற்று—இது கண்டமநாயக்கனூருக்குச் சமீபத்தில் மலையிலுள்ள ஊற்று. இதில் வேலப்பர் கோவிலுண்டு.

கம்பம்—இது ஒரு யூனியன் டவுன். இங்கு முசாபரி சத்திரம் உண்டு.

கோம்பை—இது திருவாங்கூர் மலையிலுள்ள சிறந்த நாய்களுக்குப் பேர்போன இடம்.

உத்தமபாளையம், வீரபாண்டி, மார்க்கயன்கோட்டை—வேறு முக்கியமான இடங்கள்.

## IV. கோடைக்கானல் தாலூகா.

இந்த ஜில்லாவில் இதுதான் மிகவும் மலையடர்ந்த தாலூகா. இதில் முக்கியமான இடம் கோடைக்கானல். இது பழனிமலையின் ஓர்பாகத்தில் இருக்கிறதென்று முன்னமேயே சொல்லி இருக்கிறோம். இங்கே பாம்பாறு உற்பத்தியாகிறது.

எல்லைகள்—வடக்கே பழனித்தாலூகா; கிழக்கே திண்டுக்கல்; நிலக்கோட்டை தாலூகாக்கள்; தெற்கே பெரியகுளம் தாலூகா; மேற்கே திருவாங்கூர் மலைகள், கோயம்புத்தூர் ஜில்லா.

மலைகள்—கொடைக்கானல் மலைகள்.

கோடைக்கானல்—இந்த டவுனுக்கு ரயில் மார்க்கம் இல்லை. கோடைக்கானல் ரோட் என்ற அம்மயநாயக்கனூரில் இறங்கித்தான் இங்கு வரவேண்டும். இது ஒரு முனிசிபல் டவுன். இங்கு மழை அதிகம். இங்கு ஓர் ஏரியும், நீர் வீழ்ச்சியும், ப்ரைன்ட் பார்க்கும், நட்சத்திரசாலையும், கோகர்ஸ்வாக்கும், (Coaker's Walk) தூண்மலையும் (Pillar-Rocks) காணத்தக்க காட்சிகள். இவைகளைத் தவிர இவ்விடத்திற்கு அனேக ஐரோப்பியரும், நம்நாட்டுப் பணக்காரர்களும் குளிர்ச்சிக்காக வருகிறார்கள் என்றும், ஐரோப்பிய காய்கறிகள் அதிகமாய் விளைகின்றன என்றும் முன்னமே படித்திருக்கிறீர்கள். ரோமன்காத்திலிக் கிறிஸ்தவர்வைத்த பாடசாலையும், பல பங்களாக்களும் இங்குண்டு.

## V. பழனித்தாலூகா.

இதன் ஏராளமான பாகம் செவ்வல் தரையாயும், ஒன்றுக்கும் உதவாததாயும் இருக்கிறது. இங்கு முக்கிய விளைபொருள் சோளமும், கொள்ளும், புகையிலையும், காணமுமே. மழை இங்கு மட்டு. கிணற்றுநீர் பாய்ச்சி ஜனங்கள் புஞ்சைப் பயிர்கள் விளைவிக்கிறார்கள்.

எல்லைகள்—இத்தாலூகாவுக்கு வடக்கே கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களும்; கிழக்கே திண்டிக்கல் தாலூகாவும்; தெற்கே கொடைக்கானல் தாலூகாவும்; மேற்கே கோயம்புத்தூர் ஜில்லாவும் எல்லைகளாயிருக்கின்றன.

மலை—பழனிமலை.

ஆறுகள்—வராகநதி, சண்முகநதி.

பழனி—இது இத்தாலூகாவில் முக்கியமான முனிசிபல் டவுன். இங்குள்ள சுப்ரமண்ய கோவில், தென்னிந்தியாவிலே மிகவும் சிறப்பு அடைந்தது, அதற்கு அநேக இந்துயாத்திரிகர்கள் போவார்கள். வையாபுரிக்குளம், மலை, சுப்ரமண்யர் கோவில் முதலியன இங்கு பார்க்கத்தக்கவை. இங்கு தாலூகாவுக்கு வேண்டிய கச்சேரிகளும், ஆஸ்பத்திரியும், சத்திரங்களும் இருக்கின்றன. இது ஒரு சிறந்த வியாபாரஸ்தலமே.

விருபாக்ஷி—வாரந்தோறும் இங்கு ஒரு பெரிய சந்தை கூடும்.

ஐவர்மலே—இங்கு முன் காலத்தில் பாண்டவர்கள் வந்திருந்தார்கள் என்று சொல்லுகிருர்கள். ஆதலால் அதற்கிப் பெயர் கிடைத்ததாம்.

கீரனூர்—இது பழனிக்கு வடக்கே 10 மைல் தூரத்திலுள்ளது. இங்கு மகம்மதியர் மிகுதி. இது வெற்றிலே வியாபாரத்துக்குப் பேர்போனது. இதில் சுமார் 800 வருஷங்களுக்குமுன் கட்டிய சிறுகோட்டை யொன்று இருக்கிறது.

கலேயம்புத்தூர்—பழனியிலிருந்து மேற்கே 3 மைல் தூரத்திலிருக்கிறது. இவ்வூரில் பல வருஷங்களுக்கு முன் ரோம்தேசத்து நாணயங்கள் அகப்பட்டன. அதிலிருந்து ஆதியில் ரோமாபுரியினின்று ஜனங்கள் நமதுநாட்டிற்கு வந்து போயிருக்கவேண்டு மென்று எண்ணப்படுகிறது.

ஆயக்குடி, மாம்பாறை, இடையன்கோட்டை:— இவை இங்குள்ள முக்கிய ஜமீன்கள்.

பாலசமுத்திரம், குமாரபாளேயம் இத்தாலூகாவிலுள்ள மற்ற பெரிய ஊர்கள்.

---

## VI. திண்டுக்கல் தாலூகா.

இந்த தாலூகாவில் மழை மிகவும் சொற்பம். ஆதலால் நதிகளும் கொஞ்சமே, மலேவிளேச்சலும், புகையிலேயும் இங்கு அதிகமாய் உண்டாகின்றன. இத்தாலூகா வடக்கே தாழ்ந்திருப்பதால் நதிகள் அப்பக்கத்தில் ஓடுகின்றன.

எல்லேகள்—வடக்கே திருச்சிராப்பள்ளி ; கிழக்கே திருச்சி ஜில்லா, மேலூர் தாலூகா; தெற்கே நிலக்கோட்டை தாலூகா ; மேற்கே கொடைக்கானல் பழனித்தாலூகாக்கள்.

மலைகள்—சிறுமலை, திண்டுக்கல் பாறை, வராகமலை.

ஆறுகள்—வைகை, மஞ்சள்நதி, குடவனாறு.

திண்டுக்கல்—இது இத்தாலூகாவின் தலைநகர். இந்த ஊரை யடுத்துள்ள குன்றின் மேல் ஓர் கோட்டை இருக்கிறது. இந்தப் பட்டணத்தின் பெயர் திண்டு என்ற அரசனால் வந்ததாம். இது ஒரு ரயில்வே ஸ்டேஷனும், முன்சிபல் டவுனுமாம். இதில் இறங்கித்தான் பழனிக்குப்போகவேண்டும். தோல், மலைவாழைப்பழம், வெண்கலப் பாத்திரங்கள், இரும்புச் சாமான்கள் (பூட்டுகள், பெட்டிகள்) முதலியன இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இங்கு முன்சிபல் ஹைஸ்கூல், லோயர்ஸெக்கெண்டரி ஸ்கூல், சப்கலெக்டர், ஸப்மாஜிஸ்டிரேட், டிஸ்டிரிக்ட்முனிசிப், சப்ரிஜிஸ்டரர் கச்சேரிகள் இருக்கின்றன. இது மைசூர் சண்டையில் குறிப்பிடப்பட்ட இடம். இதில் தபால் தந்தி ஆபீசுகளும், ஆஸ்பத்திரியும் உண்டு.

கன்னிவாடி—இது திண்டுக்கல்லிலிருந்து மேற்கே 10 மைல் தூரத்திலிருக்கிறது. இதில் ஓர் போர்டு பாடசாலையுண்டு. இது வாழைப்பழத்துக்குப் பேர்போனது.

அம்பாத்துரை—இது ஒரு ரயில்வேஸ்டேன். இதில் நெசவுதொழில் நடக்கிறது. இது ஆதிகாலத்தில் பாளையப்பட்டாயிருந்தது.

எரியோடு—இது மைசூர் சண்டையில் ராணுவம் தங்கிய இடமாம்.

வேடசிந்தூர்—இது இத்தாலூகாவின் வடக்கிலுள்ள ஒரு யூனியன் டவுன். இதில், டிப்டி தாஸில்தார் கச்சேரியும்,

சப்ரிஜிஸ்தர் ஆபீசும், தபாலாபீசும் உண்டு. இதற்குச் சமீபத்தில் நல்ல புகையிலை விளைகிறது.

பலகனூத்து—இது திண்டுக்கல்லிலிருந்து பழனிக்குப் போகும் பாதையிலிருக்கிறது. இதில் சத்திரமும், முசாபரி பங்களாவும் உண்டு. இதற்குச் சமீபத்தில் தங்கம் கலந்த மணல் கிடைக்கிறது.

இவைகளைத்தவிர தவசிமடை, தாடிக்கோம்பு, சுக்காம் பட்டி, மெக்கலாம்புரம் முதலியன முக்கிய ஊர்கள்.

---

## VII. நிலக்கோட்டைத் தாலூகா.

இது தான் இந்த ஜில்லாவின் மத்தியிலுள்ள தாலூகா. இந்தத் தாலூகாவிலுள்ள அணைப்பட்டி என்னுமிடத்தில் தான் வைகைக்கு கட்டப்பட்ட அணையிலிருந்து பெரியாற்றின் கால்வாய்களின் வழியாய் தண்ணீரைப் பிரிந்து போகச் செய்கிறார்கள்.

இத்தாலூகா நாலாபக்கங்களிலும் மலைகள் சூழ்ந்திருப்பதால் இதற்கு கோட்டை என்ற பெயர் வந்ததாம். இத்தாலூகாவுக்கு வடக்கிலும் கிழக்கிலும் சிறுமலைகளும்; அழகர்மலையும்; தெற்கில் நாகமலையும்; மேற்கில் ஆண்டிபட்டி மலையின் ஓர் பாகமும் இருக்கின்றன. இது மிகவும் நீர் வளமுள்ள தாலூகா.

இதற்குக் கொஞ்சதூரத்துக்குக் கிழக்கே வைகையின் குறுக்கே பேரணை, சிற்றணைகள் கட்டப்பட்டிருக்கின்றன.

பேரணை, சிற்றணைகளாகிய இவ்விரண்டும் சுமார் 350 வருஷங்களுக்கு நம்மையாண்ட விசுவநாத நாயக்கரால் கட்டப்பட்டன.

எல்லைகள்—வடக்கே திண்டுக்கல் தாலூகா, சிறுமலைகள்; கிழக்கே மேலூர் தாலூகா, அழகர்மலை, மதுரைத் தாலூகா; தெற்கே மதுரை திருமங்கலம் தாலூகாக்கள்; மேற்கே பெரியகுளம் கொடைக்கானல் தாலூகாக்கள்.

ஆறுகள்—வைகை ஆறு, மஞ்சள் ஆறு.

நிலக்கோட்டை—இது இந்தத் தாலூகாவில் முக்கியமான இடம். அம்மைய நாயக்கனூரிலிருந்து கொடைக்கானல் போகும் பாதையில் இது இருக்கிறது. இங்கு தாலூகாவுக்கு வேண்டிய கச்சேரிகள் இருக்கின்றன.

சோழவந்தான்—சோழ தேசத்தைப் போல் செழிப்பாயிருப்பதால் இதற்குச் சோழவந்தான் (சோழவம் தான்) என்ற பெயர் வந்தது. வைகை யாற்றின் கரையில் இது இருக்கிறது. இராணி மங்கம்மாள் இராமேசுவரம் போகிற பிரயாணிகளுக்குக் கட்டிய சத்திர மிங்குண்டு. இதில் ஏராளமான தென்னந் தோப்புக்கள் இருக்கின்றன. இது ஓர் ரயில்வே ஸ்டேஷன்.

அம்மைய நாயக்கனூர்—இதற்கு கோடைக்கானல் ரோட் என்றும் பெயர். இந்த ஸ்டேஷனில் இறங்கிப் பிறகு மோட்டார் வண்டி ஏறி ஜனங்கள் கொடைக்கானலுக்குப் போகிறார்கள். 1736-ல் நாயக்கர்களுக்கும், சண்டா சாஹிபுக்கும் நடந்த சண்டையில் சண்டா சாஹிப் இவ்வூருக்கு சமீபத்தில் ஜயம் அடைந்தார்.

திருவேடகம்—திருஞான சம்பந்தர் மடமும், சுந்தர பாண்டின் கட்டிய கோவிலும் இவ்வூரில் விசேஷம். ஞான சம்பந்தர் க்ஷமணர்களுடன் வாதுசெய்கையில் அவர் வைகையில் விடுத்த ஏடு இங்கு கரையேறினதாம்.

மேட்டுப்பட்டி—இது நிலக்கோட்டைக்கு 6 மைல் தூரத்தில் தெற்கில் வைகைநதிக் கரையிலிருக்கிறது. இதற்குச் சமீபத்திலுள்ள சித்தர்மலையில் பாண்டவரின் படுக்கையிருந்ததாக சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

வத்தலக்குண்டு—கொடைக்கானலுக்குப் போகிறவர்களில் சிலர் இங்கு தங்கிப் போவார்கள். இங்கு சம்பா நெல் அதிகமாய் விளைகிறது. இதற்குச் சமீபத்தில் ஓர் புராதனமான கோட்டை பாழாய் இருக்கிறது. ஹைதர் ஆலி 1760௵ இங்கு நடந்த சண்டையில் தோற்றுப் போனான்.

---

## VII மேலூர் தாலூகா.

இது இந்த ஜில்லாவின் கிழக்குப் பக்கத்தில் இருக்கிறது. பெரியாற்று வாய்க்காலால் இதன் பெரும் பாகம் நீர் பாய்ச்சப்படுகிறது. அந்த நீர்ப்பாய்ச்சல் ஏற்படுமுன் இத்தாலூகாவின் பெரும்பாகம் தரிசு நிலமாய் இருந்தது. இப்போது தரிசெல்லாம் நஞ்சைகளாக மாற்றப்பட்டு சாகுபடி செய்யப்படுகின்றன. இத்தாலூகா ஐந்தில் ஒரு பாகம் காடுகளால் நிறைந்திருக்கிறது.

எல்லைகள்—வடக்கே திருச்சிராப்பள்ளி ஜில்லா, புதுக்கோட்டை ராஜ்யம்; கிழக்கேயும் தெற்கேயும் இராமநாத

புரம் ஜில்லா; மேற்கே மதுரை, நிலக்கோட்டை திண்டுக்கல் தாலூகாக்கள்.

மலைகள்—கரண்டமலை, அழகர்மலை. இன்னும் வேறு சில குன்றுகளும் உண்டு.

ஆறுகள்—திருமணிமுத்தாறு, வரிசிலை.

மேலூர்—இது மதுரைக்கு வடகிழக்கே 18 மைல் தூரத்திலிருக்கிறது. தாலூகாவிற்கு வேண்டிய பல கச்சேரிகளும் பிரயாணிகள் தங்க சத்திரமும் இங்கு உண்டு. இது வரவர பெரிய பட்டணமாகின்றது. இவ்வூருக்குச் சமீபத்தில் ஒருபெரிய ஆலமரம் பார்ப்பதற்கு அழகாயிருக்கிறது.

அழகர்கோவில்—இது ஓர் சிறந்த வைஷ்ணவ ஸ்தலம். இங்கு அழகரின் கோவில் இருப்பதால் இதற்கு அப்பெயர் கிடைத்தது. அக்கோவில் மலை அடிவாரத்தில் இருக்கிறது. அதைச் சுற்றிலும் திருமலை நாயக்கரால் கட்டப்பட்ட கட்டிடங்கள் பாழாய் கிடக்கின்றன. இந்தக் கோவிலிலுள்ள அழகர்தான் ஒவ்வொரு வருஷத்துச் சித்திரை மாதத்திலும் மதுரைக்கு வருகிறார். , மலையில் ஒரு சிற்றருவி உண்டு. இங்கு சாயச் சரக்குகள் இப்போது விளைகின்றன.

திருவாதவூர்—இது மேலூருக்கு கிழக்கே 6 மைல் தூரத்தில் இருக்கிறது. இதுதான் மாணிக்கவாசக சுவாமிகள் பிறந்த இடம்.

நத்தம்—இது ஒரு யூனியன் டவுன். சிறுமலைக்கும் அழகர்மலைக்கும் மத்தியில் கணவாயிலிருக்கிறது. இதில் ஓர் பாடசாலையும், சப்ரிஜிஸ்தர் ஆபீசும், ஒருபழம் கோட்டையுமுண்டு. இவ்வூரில் கள்ளர்வாசம் மிகுதி. எண்ணெய் வியாபாரம் இங்கு மிகுதி.

கோத்தம்பட்டி:—இங்கு இரும்பு அகப்படுகிறதாம்.

மதுரைஜில்லா பூகோளசாஸ்திரம் முற்றிற்று.

# மதுரைஜில்லா சரித்திரம்.

## கற்கால மனிதர்.

நமது ஜில்லா பழைய பாண்டிநாட்டின் ஓர் பாகம். அப்பாண்டியநாடு இப்போதுள்ள மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களேயாகும். இது நமது இராஜதானியின் தென்பாகம். மதுரை என்ற தலைநகரின் பெயரால் இந்த ஜில்லா முழுதும் மதுரை ஜில்லா என்றே சொல்லப்படுகிறது. ஆதிகாலத்தில் நமது ஜில்லா முழுதும் மரங்களடர்ந்த காடாயிருந்தது. அக்காலத்தில் நாகரீகமற்ற ஓர் வகை ஜாதியார் இங்கு வசித்தார்கள். அவர்களுக்கு இரும்பு முதலிய உலோகங்களாற் செய்யப்பட்ட கத்தி முதலிய ஆயுதங்கள் கிடையா. அவைகளுக்குப்பதிலாகக் கருங்கல்லாற்

செய்யப்பட்ட ஆயுதங்களையே உபயோகித்து வந்தார்கள். அவர்களில் இறந்துபோனவர்கள் அவ் வாயுதங்களுடன் கல்லறைகளில் புதைக்கப்பட்டார்கள். அக் கல்லறைகள் பல இப்போது நமது ஜில்லாவிற் பல இடங்களில் கண்டுபிடிக்கப் பட்டன. இம் மனிதருக்குக் கற்கால மனிதர் என்று பெயர்.

---

## மதுரை ஸ்தாபகம்.

இவ்வாறு கற்கால மனிதர் வசிக்கையில், வட இந்தியா விலிருந்து ஆரியர் என்ற ஜாதியார் தாங்கள் வசிப்பதற்கு அங்கே இடம் போதாமல் தெற்கே வந்து அங்குள்ள காடுகளை வெட்டிக் குடியேறினார்கள். அவர்களில் யமுனை நதிக் கரையி லுள்ள மத்ரா என்னும் பட்டணத்தில் வசித்தவர்கள் ஓர் பட்டணத்தை (மதுரையைக்) கட்டி அதற்குத் தாங்கள் முன் வசித்த ஊரின் பெயராகிய மத்ரா என்ற பெயரையே இட்டார் களென்றும், அதுவே பின்னால் மதுரை என ஆனதென்றும் சரித்திரக் காரர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் இவ் விஷயத்தைப்பற்றி இன்னொரு வரலாறு முண்டு. திருநெல் வேலி ஜில்லா தாம்பிரவர்ணிநதி முகத்துவாரத்திலுள்ள கொற் கை என்னும் பட்டணத்தைத் தலைநகராக்கிக்கொண்டு பாண் டியன் என்னும் அரசன் இந் நாட்டை ஆண்டுவந்தான். அவனுடைய இரண்டு சகோதரர்களாகிய சோழனும், சேர னும் புதுநாடுகளை ஜயிக்க எண்ணி அங்கிருந்து புறப்பட்டுப் போய் சோழ, சேர நாடுகளை ஸ்தாபித்தார்கள். பாண்டியன் கொற்கையிலே இருந்துவிட்டான். பின்னிருந்த அரசர்கள் அவ்வரசன் சந்ததியார்களே யாவர்.

கொற்கையைத் தவிர வேறு பட்டணங்கள் வேறு வேறு சமயங்களில் தலைநகர்களாக ஆனதுமுண்டு. ஓர் காலத்தில், திருநெல்வேலி ஜில்லா கல்யாணபுரத்திலிருந்த குலசேகர பாண்டியன் இந்நாட்டை ஆண்டுவந்தான். அப்பொழுது கடம்பவனத்தின் நடுவில் சோமசுந்தரக் கடவுள் ஸ்வயம்பு வாய்த் தோன்றி அடியார்களுக்குக் கிருபை செய்து வருகை யில் ஒருநாள் அப் பாண்டியனுடைய சொற்பனத்தில் தோன்றித் தான் எழுந்தருளிய இடத்தில் கோயில் கட்டும் படி உத்திரவு செய்தாராம். குலசேகரன் கோயிலைக் கட்டி முடித்த பிறகு அதைச் சுற்றிலும் ஜனங்கள் குடி யேறினார்கள். அவ்விடத்திற்கு என்ன பெயரிடுவதென்று குலசேகரன் யோசிக்கையில் கடவுள் மறுபடியும் அவன் முன் தோன்றி ஆநந்தத் தாண்டவமாடினாராம். அப்பொழு தவர் தலையிலிருந்த மதுரமான கங்கை நீர் நாலாபக்கங் களிலும் சிதறியதால் அந்நகருக்கு மதுரை என்று பெயரிட லாயிற்றும்.

---

## பூர்வீக பாண்டியர்கள்.

பாண்டியர் என்னும் பட்டப் பேருடைய அரசர்கள் சுயேச்சயாய் கிறிஸ்துவுக்குப் பின் 2 நூற்றூண்டு வரை ஆயிரக்கணக்கான வருஷங்களாய் இந்நாட்டை ஆண்டார் கள். அவர்களுடைய காலத்தில் வேறு வேறு சமயத்தில் 3 தமிழ்ச் சங்கங்கள் இங்கிருந்தன. அவற்றில்
128—148 கி. பி. கடைசித் தமிழ்ச் சங்கம் உக்கிர பெருவழுதி பாண்டியன் காலத்திலிருந்தது. அக்காலத்தில் தான் நக்கீரர், கபிலர், ஔவையார், திருவள்ளுவர் முதலிய 49 தமிழ்ப் புலவர்கள் இருந்தார்கள். கடைசித்

தமிழ்ச்சங்கம் மட்டும் இப்போதுள்ள மதுரையி லிருந்தது. முதலிரண்டும் இருந்த இடங்கள் கடலில் முழுகிப்போயின. ஆகையால் அவற்றிலுள்ள புஸ்தகங்களும் கடலில் முழுகிப் போயின. கடைச் சங்கத்துப் புஸ்தகங்கள் பல இப்போ திருக்கின்றன. அவைகளைப் படித்துப் பார்த்தால் மற்ற தேசத்தார்கள் நாகரீகமற்றவர்களா யிருந்தகாலத்திலும், கல்வி, கைத்தொழில், நாகரீகம், வியாபாரம் முதலியவற்றில் நம் நாட்டார்கள் மிகவும் சிறந்தவர்களா யிருந்தார்களென்று தெரிகிறது.

பாண்டிய சிற்றரசர்கள் (200—900. கி.பி.) இவ்வாறிருக் கையில் வடக்கிலிருந்து வந்த "பல்லவர்"பாண்டியர்களை ஜயி த்துஅவர்களைத் தங்களுக்குக் கப்பம் கட்டும்படி செய்தார்கள். இவர்களுடைய வம்சத்தைச் சேர்ந்தவர்கள். இப்போதுள்ள அகமுடையார்,வன்னியர், படையாட்சி முதலியோராம்.

கோதாவரி நதிக்கரையிலுள்ள வங்கி இப்பல்லவர்க்குத் தலைநகரமாக இருந்தது. இவர்கள் நம்நாட்டை 700 வருஷ ங்கள் ஆண்டார்கள். அவர்களில் மஹேந்திரவர்மா மதுரை க்கு 5 மைல் தூரத்திற்கு மேற்கில் வைகையிலிருந்து பிரி ந்து போகும் பல்லவ வாய்க்காலை வெட்டினான். இப்பல்லவ வம்சத்தார் வியாபார முதலியவற்றை விருத்திசெய்து நாட் டை நன்றாய் ஆண்டார்கள்.

அப்பால் இவர்களிலும் பலிஷ்டராகிய சாலுக்கியர் இவர்களை வென்று இவர்களிருந்த இடத்திலிருந்து இவர் களைத் துரத்தி விட்டார்கள்.

இவ்வாறு துரத்தப்பட்ட இவர்கள் காஞ்சீபுரமடைந்து, தாங்கள் க்ஷமணமதத்திற் சேர்ந்ததுமல்லாமல் தங்கள் சிற்றரசர்களாகிய பாண்டியன் முதலியவரையும் பின்பற்றச் செய்தார்கள். பாண்டியரும் அவர்பிரஜைகளும் க்ஷமணராகஇருந்தபொழுதும் அவர் மனைவி மங்கையர்க்கரசி மாத்திரம் இந்துமதத்தையே தழுவினுள். அக்காலத்தில் ஸ்ரீகாழியில் அவதரித்த திருஞானசம்பந்தர் மதுரை அடைந்து க்ஷமணர்களால் சொஸ்தப் படுத்தமுடியாத கூன்பாண்டியனுடைய ஜ்வரத்தை சொஸ்தப்படுத்தி அவரை ஹிந்துவாக்கி க்ஷமணர்களைப் பல வாதுகளில் வென்று அவர்களைக் கழுவேற்றச் செய்தார்.

அப்பால் க்ஷமணமதத்தைப் பரவச்செய்த பல்லவர்களைப் பாண்டியர் வென்று அவர்களைச் சிற்றரசராக்கிக் கொண்டு மிகச் சொற்பகாலம் ஆண்டார்.

**சோழ பாண்டியர்கள் (கி. பி. 900—1200.)** தன்பின்பு சோழர்கள் பாண்டியர்களை வென்று இந்நாட்டை சுமார் 300 வருஷங்கள் வரை யாண்டார்கள். (906—946. கி. பி.) பிரந்தாகன் என்ற சோழனும், இராஜ இராஜேசுவர சோழனும் அவர்களில் முக்கியமானவர்கள். அவர்களை ஜயிக்கவேண்டுமென்று பாண்டியர்கள் எவ்வளவு முயன்றும் சரிப்படவில்லை. இவ்வரலாற்றை கீரனூர்க் கோவிலில் உள்ள சாசனத்தால் அறியலாம். சோழ நாட்டையும் பாண்டிய நாட்டையும் சேர்த்து ஆண்ட சோழர்கள் சோழபாண்டியர் என்று பட்டம் வைத்துக் கொண்டார்கள்.

இவ்வாறிருக்கையில் பழையபாண்டிய வம்சத்தைச் சேர்ந்த மாறவர்ம சுந்தர பாண்டியர் சோழனை ஜயித்துப்பாண

டிய நாட்டை சுயேச்சையாய் ஆண்டார். அதற்குப் பிறகு வந்த ஜடவர்ம சுந்தர பாண்டியர் இலங்கையைப் படையெடுத்து ஜயித்து அங்கிருந்து மிகுந்த பொருள் கொண்டு வந்து தமது நாட்டிற்கு அதிக நன்மை செய்தார்.

இவ்வாறாகப் பாண்டியர்கள் மறுபடியும் சுயேச்சையாய் நமது நாட்டை ஆண்டார்கள்.

முகம்மதியர்—14-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் டெல்லியை யாண்ட அல்லாவுடீன் கில்ஜி என்பவனுடைய சேனைத் தலைவன் மாலிக்காபர் என்பவன் தென்னிந்தியாவைப் படையெடுத்து அங்குள்ள அரசர்களை வென்றும், ஊர்களைக் கொள்ளையடித்தும், மகம்மதிய மதத்திற் சேராதவர்களைக் கொன்றும் வந்தான். அவன் இராமேசுவரம் வரை சென்றதை அறிவிக்க அங்கு ஒரு ஜயஸ்தம்பமும் கட்டினான். மாலிக்காபர் மதுரையை எதிர்த்தபோது ராஜஸிம்ம பாண்டியர் அரசரா யிருந்தார். அவர் மாலிக்காபருக்கு பயந்து மதுரையை விட்டு பெரியகுளத்திற் கடுத்த சின்னமனூரில் மறைந்திருக்கும் பொழுது அங்குள்ள ராஜஸிம்மேசுரர் கோயிலைக் கட்டினார். சின்னமனூர்க் கோவிலில் உள்ள சாசனங்களால் இவ்விஷயம் நன்றாய்த் தெரிகிறது. மதுரையை ஜயித்த காபர் தன்னுடைய ஆட்களில் ஒருவனை இந்நாட்டையாளும்படி செய்துவிட்டான். அதன் பிறகு சுமார் 50 வருஷகாலம் எட்டு முகம்மதிய அரசர்கள் நமது நாட்டை ஆண்டார்கள். 1314 1364 கி. பி.

ஹோயஸ்லோ.—இப்பெயருடைய வம்சத்தைச் சார்ந்த இந்து அரசர்களில் ஒருவர் துங்கபத்திரைக் கரையிலுள்ள

ஹம்பியைத் தலைநகராக்கிக்கொண்டு விஜயநகர ராஜ்யத்தை ஸ்தாபித்து தென்னிந்தியாவிலுள்ள எல்லா அரசர்களையும் தமக்குக் கப்பங் கட்டும்படி செய்தார். அவ்வரசர் மதுரையிலுள்ள முகம்மதியரைத் துரத்தும்படி தமது சேனைத்தலைவரான கம்பன்ன உடையாரை யனுப்பினர். அவர் முகம்மதியரை மதுரையிலிருந்து துரத்திவிட்டார். அவர் வம்சத்தைச் சார்ந்தவர்களும், நாயக்கத் தலைவர்களும் விஜய நகரத்தரசனுக்குட்பட்டு இந்நாட்டை மேற்பார்த்து வந்தார்கள். எனினும்இடையே அவர்களுக்குட்பட்டுப் பாண்டியர்கள் 1559 வரை ராஜ்யாதிகாரம் செய்துவந்தார்கள். அவ்வருஷத்தில் வீரசேகரசோழன் பாண்டியரைத் தோற்கடித்து இந்நாட்டைக் கைப்பற்றினன். பாண்டியரும் அவர் மகனும் விஜயநகரத்தரசரிடம் போய்முறையிட்டுக் கொண்டார்கள். அவர் தமது சேனைத் தலைவராகிய நாகம நாயக்கரை அனுப்பி, தமக்குச் சிற்றரசனுயிருந்தும் தம் உத்திரவில்லாமல் மதுரையைக் கைப்பற்றிய சோழனைத் துரத்தும்படி சொன்னர். நாகமநாயக்கர் அவ்வாறே செய்து அரசனுடைய உத்திரவின்படி நாட்டைப்பாண்டியனிடம் ஒப்புவிக்காமல் தாமே நாட்டையாளத் தொடங்கினர். இச்செய்தியைக் கேள்விப்பட்ட விஜயநகரத் தரசருக்கு அடங்காத விசனமுண்டாகி நாகமர் தலையைக் கொண்டுவரக் கூடியவர்கள் தமது சேனையில் யாராவது இருக்கின்றார்களா என்று கேட்டார். ஒருவராவது மிகவல்லவராகிய நாகமனை எதிர்த்துச் செல்லத் துணியவில்லை. கடைசியில் நாகம நாயக்கரின் மகனுகிய விசுவநாத நாயக்கர் தம் தகப்பனரை ஜயித்துவருவதாக ஒப்புக்கொண்டு புறப்பட்டார்.

விசுவநாதர் மதுரையை அடைந்து தம் தகப்பனுரைத் தோற்கடித்து அவரைச் சிறைப்படுத்தி அரசர் முன் கொண்டுவந்து நிறுத்தினுர். அரசர் மிகுந்த சந்தோஷமடைந்து தமக்கு வேண்டிய வெகுமதிகளைக் கேட்கும்படி விசுவநாதரை வேண்டினுர். விசுவநாதர் தம் தகப்பனுரைக்கொல்லாமல் அவரை விடுதலை செய்யும்படி கேட்டார். அரசர் அப்படியே செய்ததோடு விசுவநாதரை மதுரைக்கு சாஸ்வத கவர்னராக நியமித்தார்.

---

## நாயக்கர்கள்.

### விசுவநாத நாயக்கர் (1559—1563 கி. பி.)

விசுவநாதரே மதுரையை ஆண்ட நாயக்க அரசர்களில் முதல்வர். அவர் அரசரானதும் மதுரையிலுள்ள பழங் கோட்டைச் சுவர்களை இடித்து 72 கொத்தங்களுடன் புதுக் கோட்டையைக் கட்டினுர். பல அக்கிரகாரங்களையும் நிர்மித்தார். மதுரையைச் சுற்றிய பாகங்களில் இருந்த தண்ணீர்க் கஷ்டத்தை நிவிர்த்திப்பதற்காக வைகையாற்றில் பேரணை சிற்றணைகளைக் கட்டி அவ்வணைகளிலிருந்து கால்வாய்களின் வழியாய் ஜலத்தைத் திருப்பிக்கொண்டுவந்து நாட்டைச் செழிப்பித்தார். இராமேசுவரம், ஸ்ரீரங்கம் முதலிய யாத்திரை ஸ்தலங்களுக்கு போகும் பிரயாணிகளுக்கு உண்டாக்கும் திருடர் பயத்தை நீக்கினுர். தமக்குச் சொந்தமான வல்லம் கோட்டையைச் சோழனுக்குக் கொடுத்துவிட்டு அவருக்குச் சொந்தமான திருச்சிராப்பள்ளிக் கோட்டையைத் தாம் பெற்று அங்கிருந்தே இந்நாட்டை யாண்டுவந்தார்.

விசுவநாதருக்குப் பிறகு திருமலை நாயக்கர்வரை உள்ள இவ்வரசர்கள் எல்லாம் திருச்சிராப்பள்ளியிலேயே வசித்து வந்தார்கள்.

விசுவநாதருக்கு அரியநாயகமுதலியார் என்ற சிறந்த மந்திரி ஒருவர் இருந்தார். அவரே மதுரை மீநாக்ஷியம்மன் கோவிலில் உள்ள ஆயிரக்கால் மண்டபத்தைக் கட்டினவர். அவருடைய உருவம் ஆயிரக்கால் மண்டபத்தில் நுழையும்போது இடது பக்கமுள்ள முதல் தூணில் காணப்படும். விசுவநாதர் திருச்சிராப்பள்ளியில் இருக்கையில் திருநெல்வேலியில் திடீரென உண்டான சண்டைக்குழப்பங்களை இவர் அடக்கினர். இவரே இந்நாட்டை 72 பாளையப்பட்டுகளாகப் பிரித்து ஒவ்வொன்றையும் ஒவ்வொரு பாளையக்காரனுக்குக் கொடுத்து விரோதிகள் வரும்போது அவனவன் தன்தன் சேனையுடன் வந்து நாட்டைக் காக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்தார். அரியநாயக முதலியாரின் வம்சத்தார் இப்பொழுதும் சோழவந்தானில் இருக்கிறார்களாம்.

விசுவநாதர் காலத்திலிருந்து திருமலை காலம் வரை பாண்டியர்கள் பேருக்குமட்டும் அரசரா யிருந்தார்கள். ஆனால் நாட்டை யாண்டது நாயக்கர்களே.

குமார கிருஷ்ணப்ப நாயக்கர் (1563—1573. கி. பி.) விசுவநாதரின் மகனாகிய இவர் 10வருஷ நாட்டையாண்டார். இவர் காலத்தில் தும்பாச்சி யென்னும் ஓர் பாளையக்காரன் மதுரையை எதிர்த்தான். கிருஷ்ணப்பர் அவனை தோற்கடித்துக் கொன்றதோடு அவனுக்குதவி செய்த கண்டி ராஜனையும் ஜயித்து இலங்கைத் தீவைக் கைப்பற்றி அங்கோர் கவர்னரை ஏற்படுத்திவிட்டுத் தன்னாட்டிற்குத் திரும்பினர்.

இவ்வரசர் அநேக அக்கிரகாரங்களையும் கோவில்களையும் கட்டினார். நீர்ப் பாய்ச்சலுக்காகக் கால்வாய்களை வெட்டினார். இவ்வரசர் இறந்தபிறகு அவருடைய இரண்டு புத்திரர்கள் சுமார் 22 வருஷம் இந்நாட்டை ஆண்டார்கள். அவர்களில் இளையவருடைய இரண்டு புத்திரர்கள் பட்டத்திற்கு வந்து 7 வருஷம் நாட்டைப் பரிபாலித்தார்கள். அவர்களுக்குப் பிறகு முத்துகிருஷ்ணப்ப நாயக்கர் பட்டத்திற்கு வந்தார்.

முத்துகிருஷ்ண நாயக்கர் (1602—1609.கி. பி.) இவ்வரசர் பட்டத்திற்கு வந்ததும் முன் பாண்டியனால் கவரப்பட்ட சேதுநாட்டை சேதுபதி வம்சத்திலுதித்த ஒருவருக்குக் கொடுத்தார். அச்சேதுபதி மிகவும் நன்றியறிதலுள்ளவராய் இருந்ததால் 72 பாளையக் காரர்களுக்கும் தலைவராக நியமிக்கப் பட்டார். இவ்வரசர் அநேக ஊர்களைக் கட்டினார். இவ்வரசரால் கட்டப்பட்ட ஊர் பசுமலையை அடுத்த கிருஷ்ணபுரம் ஆகும். அவ்வூர் பின்னால் பாழாயிற்று. அதற்குச் சமீபத்தில் அப்பெயரையுடைய ஓர் சிறு கிராமம் இப்போது புதிதாய்க் கட்டப்பட்டிருக்கிறது. இவ்வரசருக்கு மூன்று புத்திரர்கள் உண்டு. 1. முத்து வீரப்ப நாயக்கர், 2. பிரசித்தி பெற்ற திருமலை நாயக்கர், 3. குமார முத்து நாயக்கர்.

முத்து வீரப்ப நாயக்கர் — நாட்டை 14 வருஷம் ஆண்டார். அவர் காலத்தில் முகம்மதியர் இந்நாட்டைப் படையெடுத்து திண்டுக்கல்லை எதிர்த்தார்கள். அங்கிருந்த பாளையக்காரன் அவர்களை வெருட்டி விட்டான்.

## திருமலை நாயக்கர். (1623—1659. கி. பி.)

இவ்வரசரின் பெயர் அறியாதார் இத்தென் இந்தியாவில் ஒருவருமிரார். அநேக இடங்களில் திருமலை நாயக்கரால் அநேக நேர்த்தியான கட்டிடங்கள் அமைக்கப் பட்டுள்ளன. மதுரையிலுள்ள திருமலை நாயக்கர் மஹால், வண்டியூர் தேப்பக்குளம், புதுமண்டபம், ராஜகோபுரம் இன்னும் மீனாட்சி கோயிலின் பலபாகங்கள் இவ்வரசராலேயே கட்டப் பட்டவை. புதுமண்டபத்தில் விசுவநாத நாயக்கர் முதல் திருமலை நாயக்கர் வரையுள்ள நாயக்கஅரசர்களின் சிலைகளைக் காணலாம்.

மதுரையிலுள்ள ராஜகோபுரத்தைப் போல 64 கோபுரங்களைக்கட்ட இவர் ஆரம்பித்தார். அவர் கையில் பொருளில்லாததாலோ, திடீரென இறந்ததாலோ இக்கோபுரங்களில் ஒன்றேனும் முடிவு பெறவில்லை. எந்நாட்டாரும் மதுரையிலுள்ள இவ்வரசரின் கட்டிடங்களைக் கண்டு மிகவும் ஆச்சரியப்படுகிறார்கள். திருமலைநாயக்கர், கோயிலுக்கு சம்பந்தப்பட்ட கட்டிடங்களைக் கட்டியதற்குக் காரணம்:—

தாம் அரசரானதும் திரிச்சிராப்பள்ளியிலிருந்து மதுரைக்கு வருகையில் திண்டுக்கல்லில் தங்கினதாகவும், அதற்கு முன்னமே மீனாக்ஷியை இவர் வேண்டிக் கொண்டபடித் தம் காசரோகம் அங்குநீங்கியதாகவும் அதற்காக இவர் நேர்ந்து கொண்டபடி கட்டிடங்கள் முடிப்பதற்காகவே மதுரையில் தங்கினதாகவும், பிறகு அந்நகரையே வாசஸ்தானமாக ஏற்படுத்திக் கொண்டதாகவும் பூர்வீக சரித்திரங்களால் அறிகிறோம்.

திருமலை அரசராகும் பொழுதே தம் முன்னோர்களைப் போல விஜய நகரத்தரசருக்குக் கப்பங் கட்டாமல் சுயேச்சையாய் நாட்டை ஆள ஆரம்பிக்கவே, ரேங்கராஜர் என்ற அவ் விஜய நகர அரசர் திருமலையை எதிர்த்தார். திருமலை தஞ்சாவூர், செஞ்சி அரசர்களை தம்மோடு சேர்த்துக்கொண்டு ரெங்க ராஜரை எதிர்த்தார். ரெங்கராஜ், அவர்கள் மூவரையும் ஒன்று சேர ஒட்டாமற் செய்து திருமலையைச் சங்கடத்திற் குட்படுத்தினர். முன் யோசனை இல்லாத திருமலை கோல்கோண்டா சுபேதாரிடம் சொல்லி ரெங்கராஜை எதிர்க்கும்படி செய்தார். அச்சுபேதர் வடபக்கத்திலிருந்து விஜய நகர ராஜ்பத்தை எதிர்க்கவே, ரெங்கராஜ் தம் நாட்டைக் காப்பாற்றுவதற்காக திருமலையோடு செய்யவந்த சண்டையை நிறுத்திவிட்டு வடக்கே போகவேண்டியதாயிற்று கோல்கோண்டா சுபேதாருடன் செய்த சண்டையில் ரெங்கராஜ் தோற்றுப்போகவே அச் சுபேதார் செஞ்சி தஞ்சாவூர்க் கோட்டைகளைக் கைப்பற்றிக் கொண்டு திருமலையை எதிர்த்தான். திருமலை அவனை எதிர்க்கச் சக்தியற்றவராய் பிஜப்பூர் சுபேதாரிடம் சொல்லி கோலகொண்டா சுபேதாரை எதிர்க்கச் செய்தார்.

அந்த இரண்டுபேரும் ஒன்று சேர்ந்துகொண்டு திருமலையைத் திண்டாட விட்டார்கள். கடைசியில் திருமலை ஏராளமான திரவியத்தைக் கொடுத்து முகம்மதியர்களைத் திரும்ப அனுப்பினர். இதற்குள் விஜயநகரத் தரசரும் தம் படைகளைத் திரட்டினர். மைசூர் நாயக்கர் திருமலையைப் போலல்லாமல் ராஜ பக்தியுடையவ ராதலால் ரெங்கராஜுக்கு வேண்டிய உதவி செய்தார். அதற்காகத் திருமலை முகம்ம

றிய சுபேதாரை அழைத்து மைசூரை எதிர்க்கச் சொன்னார். அச் சுபேதார் மைசூரை எதிர்த்து அவ்வூரை கொள்ளை யடித்துக்கொண்டு, திரும்பி வந்து மதுரையை நிர்மூலம் ஆக்க ஆரம்பித்தான். உடனே திருமலை அவனுக்கு ஏராள மான பணத்தைக் கொடுத்து நல்ல வார்த்தை சொல்லிக் கெஞ்சி அவனைப் போகச் சொன்னார். முகம்மதியர் வடக் கே போகவே தம்மேல் படை எடுக்கச் சொல்லியதற்காக மைசூர் நாயக்கர் பெரிய சேனையோடு வந்து திருமலையை எதிர்த்தார். திருமலையால் எக்காரியமும் முடியவில்லை. கடைசியில் அவர் சேதுபதிக்குக் கடிதம் எழுதி அவரைத் தமக்கு உதவி செய்ய வேண்டினார். சேதுபதி உடனே பெரும் சேனையுடன் வந்து மைசூர் சேனையைத் தாராபுரம் வரை துரத்தித் துரத்தி யடித்தார். பிறகு திருமலை தம் தம்பி யைப் பெருஞ்சேனையோடு மைசூரை எதிர்க்க அனுப்பி னார். அவ்விளவரசர் மைசூரையடைந்து அவ்வரச னுடைய மூக்கையறுத்துக் கொண்டு தமது வெற்றியைத் தெரிவிக்க மதுரைக்கு வருமுன் திருமலை இறந்துபோனார். கிறிஸ்தவர்கள் தம் மத கோவிலை மதுரையிற் கட்டிக் கொள்ளவும், கிறிஸ்தவ மதத்தை இந்நாட்டில் பரவச் செய்ய வும் இடங் கொடுத்ததால் அவர் கொல்லப்பட்டாரென்று சொல்லிக்கொள்ளப் படுகிறது.

திருமலை கட்டிடங்களிலும், அநாவசியமான சண்டை களிலும் பணத்தை மிதமிஞ்சிச் செலவிட்டதால் பின் வந்த அரசர்களுக்கு பணம் கையில் இல்லாமற் போயிற்று. போகவே தம் நாட்டை விரோதிகளுக்கு ஒப்புக்கொடுக்க நேர்ந்தது.

## சொக்கநாத நாயக்கர். (1662—1682 கி. பி.)

திருமலைக்குப் பின் அவர் குமாரர் சொற்ப காலம் ஆண்டார். அவர் திடீரென்று இறந்துபோக அவர் மகன்சொக்கநாதநாயக்கர் பட்டத்திற்கு வந்தார். அவர் அரசரானபோது அவருக்குவயது பதினறு. அவர்காலத்தில் மைசூரரசர் மதுரையை எதிர்த்தார். சொக்கநாதர் தஞ்சாவூர் மகாராஷ்டிரரைத் தம்மோடு சேர்த்துக் கொண்டு அவ்வரசரைத் துரத்தி விட்டார். பிறகு மகாராஷ்டிரர்களே திருசிராப்பள்ளியை எதிர்த்தார்கள். பணமில்லாத சமயத்தில் திடீரென தம் சிநேகிதர்களே தம்மை எதிர்த்த வருத்தத்தால் அவர் இறந்தாரென்று தெரிகிறது. இவரே மதுரையில் திருமலை கட்டிய சில கட்டிடங்களை இடித்து அப் பொருள்களைக் கொண்டு திருச்சியில் கட்டிடம் கட்டி அங்கு வசித்தார். இவர் இறந்தபோது அக்காலத்திலிருந்த மற்ற ராணிகள் போல் இவர் மனைவி மங்கம்மாள் உடன் கட்டை ஏறுமலிருந்து விட்டாள்.

---

## மங்கம்மாள். (1689—1704.) கி. பி.

சொக்க நாதருக்குப் பிறகு அவர் மகன் ரங்க கிருஷ்ண முத்து வீரப்ப நாயக்கர் நாட்டை ஆண்டார். அவர் பட்டத்துக்கு வந்ததும் தகப்பன் இழந்த கோட்டையை விரோதிகளிடமிருந்து கைப்பற்றினர். அவர் திடீரென்று சாக அவர் மனைவியும் ஓர் சிறு ஆண் குழந்தையைப் பெற்று விட்டு இறந்தாள். அக் குழந்தையாகிய விஜய ரங்க சோக்கநாதனுக்குத் தக்க வயது வரும்வரை அவனுடைய

பூட்டியும், சொக்கநாத நாயக்கரின் மனைவியுமாகிய மங்கமாள் நாட்டை சுமார் 15வருஷம் ஆண்டாள்.

அவள் அரசியாயிருந்த போது நாட்டை மிகவும் நன்றாய் ஆண்டாள். அவள் பெண்பிள்ளையானாலும் நாட்டில் சமாதானத்தை நிலை நாட்டினாள். அவள் நாட்டிற்குச் செய்த நன்மைகள் இவ்வளவு அவ்வள வல்ல.

பல ஊர்களில் யாத்திரைகளுக்கு அன்னதானம் நடக்கும்படி சத்திரங்கள் கட்டினாள். இவற்றைத்தவிர மதுரையிலிருந்து இப்போது 4 திக்குகளிலும் பிரிந்து போகும் சாலைகளை ஏற்படுத்தினாள். அச்சாலைகளில் வழியே நடந்து போகும் பிரயாணிகள் இப்போதும் மங்கம்மாளை நினைக்கிறார்கள். இன்னும் பல ஊர்களிலும் ரஸ்தாக்களிலும் தண்ணீர்ப் பந்தல்களை ஏற்படுத்தினாள்.

தன் பேரனுக்குத் தக்கபருவம் வந்தவுடன் அவனிடம் நாட்டை ஒப்பிவித்துவிட்டு மதுரைக்குப்போய்த் தன் அரண்மனையில் வாழ்ந்திருந்தாள். அவள் அரண்மனை இப்போதுள்ள அந்திக்கடைப் பொட்டலின் வடபாகத்திலிருந்தது. இப்போது சென்ட்ரல் மார்க்கட்டும் முனிசிபல் பிரான்சு ஆஸ்பத்திரியும், மதுரைக் காலேஜ் III-பிரிவும், இராமநாதபுரம் கலெக்டர் கச்சேரியும் ஆகிய இவைகள் அவள் அரண்மனையின் பாகங்களே.

விஜயரங்கசொக்கநாத நாயக்கர் (1704—1731 கி. பி.) இவர் 26 வருஷங்கள் ஆண்டார். இவர் தமது தலைநகரில் தங்காமல் பல யாத்திரை ஸ்தலங்களுக்குச் சென்று பணத்தை வீணில் ஏராளமாக செலவு செய்தார்.

இவர் சந்ததி யில்லாமல் இறக்கவே இவருடைய மனைவி மீனாக்ஷி ஒரு பையனை ஸ்வீகார புத்திரனாக எடுத்துக் கொண்டாள்.

மீனாக்ஷி (1731—1736. கி. பி.) இவள் 5 வருஷகாலம் ஆண்டாள். இதற்குள் அவளின் ஸ்வீகாரபுத்திரன் தகப்பனாகிய பங்காரு திருமலை தன்பிள்ளைக்குப் பதிலாகத்தானே ஆளவேண்டுமென்றான். மீனாக்ஷி அதற்குச் சம்மதிக்கவில்லை. கடைசியில் இருவரும் கர்னாடக நவாப் இடம் தெரிவித்தார்கள். அவர் தமது தளகர்த்தன் சந்தா சாகிபையும், தம் பிள்ளையையும் அனுப்பி நியாயத் தீர்ப்பு செய்யச் சொன்னார். நவாப்பின் பிள்ளை, பங்காருவை ஆளும்படி ஏற்பாடு செய்து ஊருக்குத் திரும்புகையில் சந்தா சாகிபை நாட்டைப் பாதுகாக்கச் சொன்னார். சந்தாசாகிப் மீனாக்ஷியிடம் பணம் பெற்று மதுரைக்குப் போய்ப் பங்காருவைத் துரத்திவிட்டு நாட்டைத்தன் தம்பியொருவனிடம் ஒப்புவித்துவிட்டுத் திருச்சிக்கு வந்து மீனாக்ஷியையும் சிறைப்படுத்தி அங்கேயும் தன்தம்பி மற்றொருவனை ஆளச்செய்தான். சந்தா சாகிப் தன் வெற்றியைத் திண்டுக்கல் குன்றில் தான் கட்டியகட்டடங்களில் எழுதியிருக்கிறான். சிறையிலிருந்த மீனாட்சி தற்கொலை செய்துகொண்டாள்.

இதற்கு 4 வருஷத்திற்குப் பிறகு மஹாராஷ்டிரர்கள் முகம்மதியர்களிடமிருந்து இந்நாட்டைக் கைப்பற்றினார்கள். அக்காலத்தில் ஆற்காடு நவாப் பட்டத்தைக் குறித்து விவாதங்கள் நடந்தன. அப்பட்டத்திற்கு ஏற்பட்ட இருவரில் ஒருவர் இங்கிலீஷ்கார ரிடத்திலும், மற்றொருவன் பிரஞ்சுக்காரரிடத்

திலும் உதவி வேண்டினார்கள். கடைசியில் இங்கிலீஷ்காரர் உதவி செய்த மஹம்மதாலி கர்னாடக நவாப் ஆனார்.

மஹம்மதாலியும், இங்கிலீஷ்காரரும் கான்சா என்ற முகம்மதியரை மதுரை நாட்டிற்குக் கவர்னராக்கினார்கள். இவர் ஆதியில் சேது நாட்டிற் பிறந்து பின்னர் முகம்மதிய ராகி கடைசியில் பிரஞ்சுக்காரரிடம் யுத்தப் பயிற்சி மிகுதியா அடைந்தவர். இவர் முதலில் நல்லவராய் இருந்தாலும் வர வரத் தம் மேலதிகாரிகளை எதிர்த்ததால் இங்கிலீஷ்காரர்கள் அவரை தம் கையில் அகப்படச் செய்து, கொன்று, அவர் சவத்தை மதுரையின் மேற்கே வைகையாற்றின் தென்கரை யில் சமாதி வைத்துப் பள்ளிவாசலுங் கட்டினார்கள்.

மஹம்மதாலி கர்னாடக நவாப்ஆன சிறிது காலத்திற் குள் மைசூர் ஐதர் ஆலி அவரை எதிர்த்தான். அப்போது இங்கிலீஷ்காரர் மஹம்மதாலிக்கு உதவி செய்தார்கள்.

அவர்களுக்கு நேர்ந்த செலவுக்காக சேலம், மதுரை முதலியவற்றின் வருமானத்தை வசூல் செய்து கொள்ளும் படி அவர் அவர்களுக்கு உத்தரவு செய்தார். அன்று முதல் ஈஸ்டு இந்தியா கம்பெனியார் நம்மை யாண்டார்கள். அவர் களைத் தாம் நம்மவர்களிற் சிலர் கும்பினியார் என்பார்கள்.

பிறகு பல வருஷங்கள் நவாப் தம் நாட்டைக் கேவல மாக ஆண்டதோடு இங்கிலீஷ்காரரின் விரோதிகளுக்கு உத வியும் செய்தார். கடைசியில் 1801 வரு நவாப்பிடமிருந்து அநேகமாய்த் தென்னிந்தியா முழுதுமே இங்கிலீஷ்காரரிடம் வந்தது. அப்பால் கம்பெனியாரிடமிருந்து இந்தியா முழு தும் கருணை தங்கிய விக்டோரியா ராணியாரிடம் வந்தது.

தற்போது இந்த ஜில்லா மாட்சிமை தங்கிய சக்கிர வர்த்தி ஐந்தாவது ஜார்ஜ் மன்னர் என்பவரின் அரசாட்சிக்குள் இருக்கிறது. அவர் இங்கிலாந்து தேசத்திலுள்ள லண்டன் மாநகரத்தில் இருக்கிறார். அவருடைய ஆளுகைக்குள் நமது நாட்டைத் தவிர அநேக நாடுகள் எல்லாக் கண்டங்களிலு மிருக்கின்றன. இந்த எல்லா நாட்டையும் அரசர் நேராகவந்து ஆளுவது சிரமமாய் இருக்கும். ஆகையால் தமக்குப் பிரதிநிதிகளை ஆங்காங்கு நியமித்து இருக்கிறார். நமது நாட்டுப் பிரதிநிதியின் பெயர் லார்ட் ஹார்டின்ஜ். அவர் கல்கத்தாவில் வசிக்கிறார். இவருக்குட் பட்டிருக்கும் ஒவ்வொரு ராஜதானிக்கும் ஒவ்வொரு கவர்னர் நியமிக்கப் பட்டிருக்கிறார். ஒவ்வொரு ராஜதானியும் பல ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டு கலெக்டர் என்பவரால் ஆளப்படுகிறது. ஆகவே, இப்போது நமது அதிபதி நமது ஜில்லாவின் கலெக்டர்தான். சமாதானம், வரி, நியாயம் முதலியவற்றிற்கு அவர் தான் பொறுப்பாளி.

ஜமீன் பாகங்களில் நிலவரிக்கு ஜமீன்தார்களே சுதந்தரவாளிகள். அவர்கள் ஆங்கில ராஜாங்கத்தாருக்குக் கப்பங் கட்டுகிறார்கள். ஜமீனல்லாத அயன் கிராமங்களில் ராஜாங்கத்தாரே நேராக வசூல் செய்துகொள்ளுகிறார்கள். இவ்வெல்லாப் பாகங்களிலும் சிவில், கிரிமினல் நியாயங்கள் முதலிய அதிகாரங்கள் நமது ராஜாங்கத்தா ரிடத்திலே இருக்கின்றன.

கலெக்டருக்கு ரெவின்யூ வசூல் செய்வதில் உதவிபுரிய சப் கலெக்ட்டர், டிப்டி கலெக்ட்டர், தாசில்தார் (அல்லது டிப்டி தாசில்தார்) ரெவின்யூ இன்ஸ்பெக்டர், கர்ணம்,

கிராமாதிகாரி முதலிய உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தாசில்தாரே ஒவ்வொரு தாலூகாவிலும் ரிவின்யூ வசூல் செய்வதற்குத் தலைமை அதிகாரி. அத்தாசில்தார்களுக்கு மேலாக ஜில்லா கலெக்டருக்கு உதவியாக இந்த ஜில்லாவிற்கு 4 டிவிஷனல் ஆபீஸர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். திண்டுக்கல் சப் கலெக்ட்டர். இவர் டிவிஷனைச் சேர்ந்தன திண்டுக்கல், பழனித் தாலூகாக்கள். உசிலம்பட்டி டிவிஷன் டிப்டி கலெக்ட்டர்—திருமங்கலம், பெரியகுளம் தாலூகாக்கள் இவர் ஆட்சிக்குட்பட்டவை. மேலூர் டிவிஷன் டிப்டி கலெக்ட்டர்.—மதுரை, மேலூர் தாலூகாக்களே இவர் டிவிஷனைச் சேர்ந்தவை. மதுரை டவுனுக்குப் பிரத்தியேகமாக ஒரு டிவிஷனல் ஆபீஸர் இருக்கிறார். இவர்களில் கலெக்ட்டர், டிப்டி கலெக்ட்டர், கிராமாதிகாரிகளாகிய இவர்களுக்குக் கிரிமினல் அதிகாரம்—அதாவது குற்றவாளிகளைத் தண்டிக்கும் அதிகாரம் உண்டு. ஜில்லாவுக்குத் தலைவர் கலெக்ட்டர். ஆனாலும் அவருக்கு உதவியாகக் கீழே சொல்லும் டிபார்ட்டுமெண்டுகள் ஏற்பட்டிருக்கின்றன.

நியாய பரிபாலன இலாகா—இது ஜில்லாவில் நடக்கும் ஸீவில் விவகாரங்களையும் கிரிமினல் குற்றங்களையும் விசாரித்து, நியாயத்தை நிலைநிறுத்துவது. (2) போலீஸ் இலாகா-ஜனங்கள் இராஜாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களைச் சரியாக கவனிக்கிறார்களா என்று பார்ப்பதும், வலியோர் மெலியோரை தொந்தரவு செய்யாமல் கவனிப்பதும், திருட்டு, கொலை, களவு, ராஜத் துரோகம் முதலிய குற்றங்கள் நடவாமல் காப்பதும், பெருங் கூட்டங்களில் சச்சரவுகள் நடவாமல் கவனிப்பதும், கஜானாவைக் காப்பதும் இந்த

டிபார்ட்மெண்டின் வேலைகள். (3) படிப்பு இலாகா—ஜில்லா விலுள்ள பல நகரங்களிலும், கிராமங்களிலும் அநேக பள்ளிக் கூடங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு ராஜாங்கத்தார் ஏராளமான பணத்தைக் கொடுத்து படிப்பை விருத்தி செய்கிறார்கள். இந்த இலாகாவைச் சேர்ந்த ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர் முதலியோர் அடிக்கடி பள்ளிக்கூடங்களுக்கு வந்து, எப்படிப் பாடங்களைக் கற்பிக்கவேண்டும் என்பதைக் காட்டுவதோடு அந்தந்த பள்ளிக்கூடத்தில் படிப்பு சொல்லிக் கொடுப்பதற்குத் தக்கபடி கிராண்டுகளும் கொடுப்பார்கள். (4) தந்தி—தபால் இலாகா—வெளி ஊர்களிலிருந்து வரும் தந்தி, கடிதங்களைக் கொடுக்கவேண்டியவர்களுக்கு செலுத்தவும், இங்கிருந்து அனுப்பப்படுகிறவைகளை குறித்த இடங்களுக்கு அனுப்பவும், இந்த இலாகா ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கடிதங்களைத் தவிர பணம், புத்தகம், துணிமணிகள் முதலியவற்றையும் தபால் சாலைகள் மூலமாய் அனுப்ப வேண்டியவர்களுக்கு அனுப்பலாம். பணம் கையில் கிடைத்தபோது இந்த இலாகாவைச் சேர்ந்த சேவிங்ஸ் பாங்கியில் போட்டால் வட்டியுடன் மோசமில்லாமல் வேண்டும்போது பெறலாம். (5) போதுஜன உபகார இலாகா—(Public Works Department.) வண்டிகள் முதலியன செல்லும்படி சாலைகளைச் சீர்படுத்துவதும் புதிதாய்ப் பாதைகளை ஏற்படுத்துவதும், சத்திரம் சாவடிகளை ஒழுங்கு செய்வதும் நீர்ப் பாய்ச்சலுக்கு வேண்டியவை செய்வதும் இதன் கடமைகளாகும். (6) சுகாதார இலாகா—இந்த ஜில்லாவாசிகள் வியாதியால் கஷ்டப்பட்டால் அதைத் தீர்ப்பதற்கும், வியாதி வராமல் காப்பதற்கும் இந்த இலாகா ஏற்பட்டிருக்கிறது.

(7) காட்டு இலாகா—மலை முதலிய இடங்களிலுள்ள மரங்களைக் காப்பாற்றிக் காட்டைச் சீர்ப்படுத்த இந்த இலாகா ஏற்பட்டிருக்கிறது.

இந்த ஒவ்வொரு இலாகாவிற்கும் ஜில்லா கஜானுவிலிருந்து மாதாமாதம் பணம் கொடுக்கப்படுகிறது. கவர்ன்மெண்டு உத்தியோகத்திலிருந்து பிற்பாடு வயது சென்றதினால் வேலை பார்க்க முடியாத கிழவர்கள் பென்ஷன் என்னும் உபகாரச் சம்பளம் பெறுகிறார்கள். ஒவ்வொரு இலாகாவுக்கும் மேலான அதிகாரிகள் சென்னையிலிருக்கிறார்கள். அவர்கள் அந்தந்த இலாகாவின் விஷயங்களை நமது சென்னை கவர்னருக்குத் தெரிவிக்கிறார்கள். அவர் அவைகளை நமது பெருமையும் கருணையும் தங்கிய ஐந்தாவது ஜார்ஜ் சக்கரவர்த்தியார் நியமித்த இந்திய இராஜாங்க காரியதரிசிக்குத் தெரியப்படுத்துகிறார். அவர் பார்த்து நமக்கு வேண்டிய நன்மைகளை அப்போதைக்கப்போது புரிகிறார்.

இவ்வளவு ஒழுங்கோடும் தாய் தகப்பன்மார்களைப் போல நம்மை அன்புடன் காக்கும் அரசரையும், அரசியையும், ஆங்கில ஆட்சியையும் மனதார வாழ்த்துவோமாக.

முற்றிற்று.

புதிய சட்டத்திற் கிணங்க எழுதப்பெற்று

## அச்சிலிருக்கும் புஸ்தகங்கள்.

**மதுரை ஜில்லா சரித்திரமும், துரைத்தன விளக்கமும்.**

**(படத்துடன் கூடியது.)**

முதல் வகுப்புக் கணிதம்

இரண்டாம் வகுப்புக் கணிதம்

மூன்றும் வகுப்புக் கணிதம்.

நான்காம் வகுப்புக் கணிதம்

அங்கங்கே வரும் உதாரணங்கள், படங்களுடன் விளக்கப் பெற்றுள்ளன. புதிய சட்டத்திற் கூறியபடி கிராப் முதலிய எல்லாப் பாகங்களும் தெளிவாய்க் காட்டப்பெற்றுள்ளன. விரைவில் வெளிவரும்.

நமது புத்தகசாலையில் முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் அச்சுக்காப்பிப் புத்தகங்களும், இங்கிலீஷ், தமிழ் பள்ளிக்கூடங்களுக்குரிய சகல புத்தகங்களும், இதர புத்தகங்களும் சரசமான விலைக்குக் கிடைக்கும்.

உபாத்தியாயர்களுக்கும், வியாபாரிகளுக்கும் ஏராளமான கமிஷன் தரக்கூடும்.

---

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,

புக்ஸெல்லர், பப்ளிஷர் & ரப்பர் ஸ்டாம்பு மேக்கர்,

புதுமண்டபம், மதுரை.